
# மாவிட்டபுரத் திருத்தல வரலாறு



ச. து. ஷண்முகநாதக் குருக்கள்

உ

குகமயம்

# மாவிட்டபுரத் திருத்தல வரலாறு

ஆக்கியோன் :

ப்ரம்மஸ்ரீ கு. து. ஷண்முகநாதக் குருக்கள

வெளியீடு :

குரும்பசிட்டி சன்மார்க்க சபை

குரோதி பங்குனி

1965

பதிப்புரிமை]

[விலை: ரூ. 2.50

சன்மார்க்கசபை வெளியீடு :

உரிமை ஆக்கியோனுக்கே உரியது

நூல் பெற்றுக்கொள்ளும் இடங்கள் :

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்
சன்மார்கக சபை, குருமபசிட்டி, தெல்லிப்பழை
ப்ரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்,
மாவிட்டபுர ஆதீனம், தெல்லிப்பழை.

சுன்னுகம், திருமகள் அழுத்தகம்

# உள்ளுறை


பக்கம்

சமர்ப்பணம் ... ... iv
பதிப்புரை ... ... v
முன்னுரை ... ... vii
ஆசியுரை ... ... xi
அணிந்துரைகள் .. ... xii

மாவிட்டபுரத் திருத்தல வரலாறு

நகுலமுனிவர் ... ... 2
உக்கிரசேனன் வரலாறு ... ... 6
மாருதப்பிரவல்லி ... ... 7
சாந்தலிங்க முனிவரைச் சந்தித்தல் ... 10
நகுலமுனிவரைச் சந்தித்தல் ... 11
கீரிமலை வரலாறு .. ... 12
நளன் கீரிமலையை அடைதல் ... 13
குதிரைமுகம் நீங்குதல் ... ... 15
கோவில் கட்டுதல் ... ... 18
உக்கிரசிங்கசேனனின் காதல் ... 21
மாருதப்பிரவல்லி பட்டத்தரசியாதல் ... 22
மாவிட்டபுர ஆதீனம் ... ... 24
சிங்கையாரியனும் புவனேகபாகுவும் ... 26
பறங்கியர்களின் கொடுமை ... 28
ஆங்கிலேயர் ஆட்சியில் ஆலயவளர்ச்சி ... 29
கோவிலின் வளர்ச்சி ... ... 32
இரத்தினக்குருக்கள் பணி ... 33
ப்ரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள் ... 49
இன்றைய மாவிட்டபுரம் ... 53

அநுபந்தம்

ஊஞ்சற் பாக்கள் ... i
மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம் ... v
மாவைக் கலிவெண்பா ... vii
மாவைச் சுபபிரமணியர் தோத்திர விருத்தம் xi

## சமர்ப்பணம்


எனது பாட்டனர்

பிரம்மஸ்ரீ சா. சுப்பிரமணியக் குருக்கள்

(இரத்தினக் குருக்கள்)

அவர்களுக்கு இந்நூலைச்

சமர்ப்பிக்கின்றேன்.



உ

சிவமயம்

# பதிப்புரை

உலகியலிலும் மெய்ந்நெறியிலும், சென்ற முப்பது ஆண்டுகளாகப் பல தொண்டுகளைச் செய்த சன்மார்க்க சபையினர் சில வருடங்களாகச் சிறந்த பல நூல்களை வெளியிட்டிருக்கின்றனர். மேற்படி சபையினரால் எழுதப்பட்ட, **சைவசமயபோதினி 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம்** புத்தகங்கள் சைவ மாணவர்களுக்கு ஏற்றவை என வித்தியாபகுதியினரால் அங்கிகரிக்கப் பெற்று ஈழத்தின் பல பாடசாலைகளிலும் படிப்பிக்கப் பட்டு வருகின்றன. **இலக்கியமஞ்சரி** வரிசையிலும் சில நூல்கள் சன்மார்க்க சபையார் எழுதியவைகளே.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய **சைவ நற்சிந்தனைகள்** என்ற நூலை வெளியிட்டமையைத் தொடர்ந்து, ஈழத்து எழுத்தாளர் ஐவர் எழுதிய **மத்தாப்பு** என்ற குறுநாவலும், மகாஜனக் கல்லூரிச் சித்திர ஆசிரியர் ஆ. தம்பித்துரை அவர்கள் எழுதிய **ஓவியக்கலை, சிறுவர் சித்திரம்** என்னும் நூல்களும், இரசிகமணி கனக. செந்திநாதன்

அவர்கள் எழுதிய **கலைமடந்தையின் தவப்புதல்வன்** (சிற்பக் கலைஞர் திரு. வி. ஆறுமுகம் அவர்களது வாழ்க்கை வரலாறு) என்ற நூலும் சன்மார்க்க சபையினரால் வெளியிடப்பெற்றன.

மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலோடு எம் ஊரவர்களும் சன்மார்க்கசபையினருங் கொண்ட பக்தி அளவிடற்கரியது. மேற்படி கோவிலுக்குத் தங்கமுடி வைத்த பெருமை எமது ஊரிலிருந்த பெரியார் ஒருவரைச் சேர்ந்தது என்பதை எண்ணும்போது நாம் அளவிலா ஆனந்தங்கொள்ளுகின்றோம். அத்தொடர்பும் பக்தியும் நீடூழிகாலம் நின்று நிலவ வேண்டுமென்ற விருப்பினால் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் பிரதம குரு ப்ரம்மஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் எழுதிய **மாவிட்டபுரத் திருத்தல வரலாறு** என்னும் இந்நூலை மிக மனமகிழ்வுடன் வெளியிடுகின்றோம்.

இந்நூலை மகிழ்வுடன் ஏற்று, உயரிய முறையில் அச்சிட்டுதவிய சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தாருக்குச் சபை நன்றி பாராட்டுகிறது.

குரும்பசிட்டி, **சன்மார்க்க சபையினர்**
30-3-65.

உ
சிவமயம்

# முன்னுரை

மாவிட்டபுரத் திருத்தல வரலாற்றைப் பலர் பலவகையில் வரைந்துள்ளார்கள். இதனுல் வாசிப்பவர்களது மனதிற் குழபபமான சிந்தனைகள் தோன்றுகின்றன. அதனுல் உண்மை வரலாற்றை அவர்கள் உணரமுடியாது தவிக்கிருர்கள். ஒரு நாட்டின் சரித்திர சம்பவத்தைக் கற்பனைச் சம்பவங்களோடு கலப்பில்லாது எழுதுவதே முறையான செயலாகும். வரலாறருேடு சம்பந்தபபட்ட செய்திகளை வாசகர்கள் ஆர்வத்துடனும் விருப்புடனும் படிக்க வேண்டுமென்பதற்காகவோ அன்றேல் அதில் இலக்கியச் சுவை மிகுந்திருக்க வேண்டு மென்பதற்காகவோ அவ் வரலாற்று மூலச் செய்திகளில் எள்ளளவேனுங் கற்பனை அம்சங்களைப் புகுத்துதல் கூடாது. கற்பனைச் சம்பவங்கள் உண்மை வரலாற்றை முற்ருய் அழித்து விடும் என்பது சான்ருேர்களின் கருத்தாகும்.

மாவிட்டபுரத் திருத்தல வரலாற்றைப் பாக்கள் மூலமாகவும், கட்டுரைகள் வடிவாகவும, கதை உருவிலும், நாடக அமைப்பிலும் பலர் பலவிதமாக ஆக்கியுள்ளனர் சில இடங்களில் உண்மைச் சம்பவங்களை அப்படியே கூறியும், சில இடங்களில்

கற்பனைச் சம்பவங்களைப் புகுத்தியும், சிலவற்றில் உண்மைக்கு மாறான பாத்திர சிருட்டிகளைச் சொருகியும் எழுத்தாளர் சிலர் எழுதியுள்ளனர். இதுவரை வெளிவந்த மாவிட்டபுரத் திருத்தல வரலாற்று நூல்கள், கறபனை மிகுந்தும் சரித்திரத் திற்கு மாறானதுமான சில செய்திகளைக் கொண் டுள்ளனவாய் விளங்குகின்றன. மிகவும் அண்மை யில் வெளிவந்த ஒரு நாடக நூல், மாவிட்டபுரத் தல வரலாற்றை அடியோடு மாற்றியமைத்தும் உண்மைச் சம்பவங்களை மறைத்தும் எழுதப்பட் டுள்ளது. வருடங்கள் செலலச் செல்ல, சரித்திர வரலாற்றில் வீண் சந்தேகங்களுக்கு இடமேற் பட்டு ஈற்றில் மாவிட்டபுரத் தலவரலாறு ஒரு பொய்யான சமபவம் என்ற தீர்பபுககு வழி வகுக் கும். இந் நாடக நூலிலே கற்பனைப பாத்திரங கள் சொருகப்பட்டும் கறபனைச்சமபவங்கள் புகுத் தப்பட்டுமிருப்பதைச் சரித்திரம் தெரிந்தவர்கள் அறிவர். இதனை, நூலாசிரியரே மறைமுகமாக ஆமோதித்துள்ளார். உண்மை வரலாற்றை எழுதுமிடத்து அங்கு எக்காரணங் கொண்டும் புதுப் புதுச் சம்பவங்களையோ அல்லது சிருட்டி களையோ புகுத்துதலாகாது என்பதே எல்லோரி னதும் முடிபாகும். அதற்கமைவாகவே **மாவிட்ட புரத் திருத்தல வரலாறு** என்னும் இந் நூலை யான் எழுத முறபட்டேன்.

இதுவரைகாலமும் மாவிட்டபுரத் திருத்தல வரலாறறை எழுதத் துணிந்தவர்கள் ஆரமபகால

நிகழ்ச்சிகளை மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூறிவிட்டு, மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலைத் தாபித்ததோடு சரித்திரத்தை முடித்துவிட்டனர். அதன்பின்னர் நிகழ்ந்தவற்றை எழுதத் துணியவில்லை கி. பி. 13ஆம் நூற்றாண்டிற்குப் பின்னிருந்த நிலைமையை எவராவது எழுத முற்படாததற்குக் காரணம் யாதென்பது விளங்கவில்லை. ஆகவே, உள்ளது உள்ளபடி மாவிட்டபுரத் திருத்தல வரலாற்றை எழுதவேண்டுமென ஈழநாட்டிலுள்ள பல அறிஞர்களும், கடல் கடந்து வாழ்ந்தாலும் மாவிட்டபுர முருகனது அருளைக் காத்து நிற்கும் பத்தர்களும் வேண்டிக்கொண்டபடி இந்நூலை எழுதத் துணிந்தேன். இந்நூலை எழுதுவதற்கு யான் எடுத்த பிரயத்தனங்கள் பல; அனுபவித்த இன்னல்கள் பல; எனினும் ஓரளவுக்கு எனது முயற்சி பயனளித்துவிட்டது என்பதைத் துணிவுடன் கூற முடிகிறது. இலைமறைகாயைபபோற் சம்பவங்கள் சில என் கைக்குக் கிட்டாமலும் இருக்கலாம். அவற்றைக் காணுமிடத்து அடுத்தடுத்த பதிப்புக்களிற் சேர்த்துக் கொள்ளலாம் என்பதே எமது முடிபாகும்.

இந்நூலைப் பார்வையிட்டு ஆசியுரை வழங்கிய, இப்போதைய ஆதீன கர்த்தாவும் எனது தந்தையாருமாகிய பிரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்களவர்களுக்கும், அணிந்துரைகள் வழங்கிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், அரசாங்க மொழித் திணைக்கள அத்தியக்ஷகர்

கி. லக்ஷ்மணன் எம். ஏ., அவர்களுக்கும், சைவப் புலவர் வித்துவான் வ. செல்லையா அவர்களுக் குமீ என் நன்றி உரித்தாகுக.

இந்த நூலின் அநுபந்தமாக வெளியிடப்பட் டுள்ள மாவைக்கந்தன் துதிப்பாடல்களை வழங்கிய சுன்னுகம், அ. குமாரசுவாமிப் புலவர் மகனர் திரு. அம்பலவாணபிள்ளை அவர்களுககும் என் நன்றி உரியதாகும். இந்நூலை யான எழுதுங்கால் அதற்கு வேண்டிய பல நூல்களைத் தந்துதவிய உடுவில், ஆறுமுகநாவலர் நூலக அதிபர் சிவஸ்ரீ அம்பலவாணர்அவர்களுக்கும், அட்டைப்படத்தை அழகுற அமைத்துதவிய ஓவியர் கே. கே. வி. அவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகிறேன்.

குரும்பசிட்டி சனமார்க்க சபையின் நற் ருெண்டுகளை ஈழம் நன்கு அறியும். மேற்படி சபையினர் இந்நூலைத் தங்களது வெளியீடாக வெளியிட முன்வந்தமை என் பெரும் பேருகும். அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

**சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**

*மாவைஆதீனம்*
30-3-65

உ

குகமயம்

# ஆசியுரை

'கோவிற்கடவை'க் குறிச்சி சில வரலாற்றின் மூலமாக 'நகுலேஸ்வரம்' (கீரிமலை), மாவிட்டபுரம், காங்கேசன்துறை என மூன்று பிரிவுகளாக விளங்கிற்று. இங்குள்ள ஆலயங்கள் மிகவும் பிரசித்தமானவை. ஆலய வழிபாட்டின்மூலம் மக்களனைவரும் தத்தம் இஷ்டகாம்யார்த்த சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மாவிடடபுரம் கந்தசுவாமி கோவில் வரலாற்றை மக்களனைவரும் ஆதியோடு அந்தமாக அறிந்திருக்க வேண்டுமென்ற எனது நீண்டகால விருப்பத்தை எனது சிரேஷ்ட மைந்தன் ப்ரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் **மாவிட்டபுரத் திருத்தல வரலாறு** எனும் இந்நூல் மூலம் நிறைவேற்றியுள்ளார். இந்த அரும் பெருந் தொண்டினை நினைந்து யான் மிகுந்த களிப்படைகின்றேன். இந்நூல் எனது தநதை ப்ரம்மஸ்ரீ சாமிக் குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் (இரத்தினக்குருக்கள்) அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டிருக்கிறது.

எனது மகனின் நற்சேவைகளையும் ஆற்றிவரும பெருந் தொண்டினையும் உலகமறியும்.

"அவரது திருத்தொண்டு வாழ்க! வளர்க" என ஆசீர்வதிக்கின்றேன்.

எல்லாம் வல்ல கலியுகவரதர் மகாவல்லி கஜவல்லி ஸமேத ஸ்ரீசுப்பிரமணிய பரமேஸ்வரனது திருவருள் பெற்றுய்வாராக.

சு. **துரைசாமிக்குருக்கள்**
ஆதீனகர்த்தா

மாவிட்டபுரம்
கந்தசுவாமிகோவில் ஆதீனம்
குரோதிஸு, பாற்குணமீ
21ஆம் நாள் (3-4-1965)

சிவமயம

# அணிந்துரைகள்

## 1

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

விளைவேலி பிரம்மஸ்ரீ வேதக்குட்டிக் குருக்கள், மாவிட்டபுரம் பிரம்மஸ்ரீ சபாபதிக் குருக்கள் ஆகிய இருவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நன் மதிப்பைப் பெற்றவர்கள். முப்பொழுதுந் திருமேனி தீண்டும் பாக்கியம படைத்தவர்களாய், ஆதிசைவ அந் தண குலோத்தமர்களாய் விளங்கியவர்கள் இவர்கள்.

இந்நூலாசிரியராகிய பிரம்மஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள், மேற் குறிப்பிட்ட பிரம்மஸ்ரீ சபாபதிக் குருக் களின் வழித்தோன்றல். இவர்கள் தமது ஆதிசைவ பரம்பரையை விளக்கும் விளக்கமாய், மந்திரம, தந்திரம் கிரியை என்னும் இவைகளில் நல்ல பயிற்சியும் பாண் டித்தியமும் படைத்தவர்களாய்ச் சாந்தகுணசீலராய் விளங்குகின்றார்கள். இது மாவிட்டபுரத் தலத்தின் பண்டைத் தவவிசேடம் போலும்.

குருக்கள் அவர்கள் உபகரித்த **மாவிட்டபுரத் திருத்தல வரலாறு** என்னுமிந்நூல், நகுலாசலம், மாவிட்டபுரம் என்னும் விசேட நாமங்களை விளக்கும் முகமாக, நகுலமுனிவர், மாருதப்பிரவல்லி முதலியவர் களின வரலாறுகளையும், தீர்த்தம், தலம், மூர்த்தி என்பவற்றின் விசேடங்களையும், பெரியோர்கள் பெற்ற பேறுகளையும் பத்திசுரக்கும் முறையில் எடுத்துக்காட்டு

கின்றது ஜமதக்கினி முனிவரே பிருகுமுனிவரின் சாபத்தால் நகுலமுனிவராயினர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

வடமொழி தென்மொழி நூல்களையும், சரித்திரங் களையும் ஆராய்ந்து இந்த அருமந்த நூலைக் குருக்கள் அவர்கள் தந்திருக்கின்றார்கள்.

நல்லூர், மாவிட்டபுரம் என்கின்ற திவ்விய தலங் கள் கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமானின் திருவருள் விலாசத்துக்கு இருப்பிடமானவைகள். இத் தலங்களில் அமைந்த ஆலயங்கள் பறங்கிக்காரர் காலத்துத் தரைமட்டமாக்கப்பட்டுப் பின் ஆங்கிலர் காலத்தில் புனருத்தாரணஞ் செய்யப்பட்டவை. மாவிட்டபுரம், வைதிகமும் சைவமும் கைவந்த ஆதி சைவ அந்தணர்களின் ஆதிக்கத்துட்பட்டிருந்தமையால் புனருத்தாரணஞ் செய்யப்பட்டபோது, சாத்திரவிதி களுக்கு மாறின்றி அமைந்துவிட்டது. நல்லூர் அவ் வாறு அமையவில்லை. நல்லூரில் மூலமூர்த்தி அம்பு வடிவாயிருப்பதும், அதற்குப்பக்கத்தில் அம்மைகளை எழுந்தருளச் செய்வதும் ஆகமவிரோதம். இது நாவலர் பெருமானைப் பெரிதும் புண்படுத்திவிட்டது. இதுநிற்க.

**மாவிட்டபுரத் திருத்தல வரலாறு** நல்லமுறையில் அமைந்திருக்கின்றது. இதில், சிராத்தத்தைச் சிரார்த்தம் என்பதுபோன்ற, சொற்பிழைகள் திருத்தஞ் செய்ய வேண்டியவை.

**சி. கணபதிப்பிள்ளை**

கலாசாலைவீதி.
திருநெல்வேலி,
30-3-65.

# 2

## அரசாங்கமொழித் திணைக்கள அத்தியக்ஷகர்
## கி. லக்ஷ்மணன் எம். ஏ. அவர்கள்

சென்ற சில காலமாக மக்களிடையே குறிப்பாக இந்துக்களிடையே கடவுள் நம்பிக்கை, கடவுள் வழிபாடு, சமய வாழ்வு ஆகியவை குறைந்துகொண்டு வந்துள்ளன. இதற்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்ட சௌகர்யங்களைக் கண்டு அவற்றின் மூலமே மனிதன் பூரண இன்பத்தையும், பரிபூரண நிம்மதியையும் பெறமுடியும் என்ற நம்பிக்கை வளரத் தொடங்கியது ஒரு காரணம். சமயம் மூட நம்பிக்கைகளையே அடிப்படையாக வுடையது, இக வாழ்வுக்கு முற்றிலும் தடையாவது, குறிப்பிட்ட குலத்தினர் சிலரின் சுகபோகங்களுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டது என்பன போன்ற சமயத்தைப்பற்றிய தவறான கருத்துக்களை வாக்குவன்மை பெற்ற பலர் பிரசாரஞ் செய்து வந்தது இன்னொரு காரணம். இதற்கு ஏற்றாற்போல ஆலயங்கள் முதலிய சமய ஸ்தாபனங்களிற் கடமையாற்றுவோருட் பெரும்பாலாரிடம் சமய அறிவின்மை, பக்தியின்மை, ஆசாரமின்மை, நேர்மையின்மை முதலிய ஒழுங்கீனங்கள் அதிகரிக்கத் தொடங்கியமை மற்றொரு காரணம்.

நல்லவேளையாக இப்போது சில ஆண்டுகளாக இக் குறைகள் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்கியுள்ளன. சமயத்துறையிலே ஒரு மறுமலர்ச்சியும் விழிப்புணர்ச்சியும் படிப்படியாக ஏற்படத் தொடங்கியுள்ளது. விஞ்ஞான வளர்ச்சி எவ்வளவு தூரந்தான் முன்னேறினும், அதன் மூலம் மனிதன் பரிபூரண வாழ்வையும் பரிபூரண நிம்மதியையும் அடைவது சாத்தியமாகாது என்ற எண்ணம் பல விஞ்ஞானிகள் உட்படப் பேரறிஞர் பலரிடை வலுப்பெறுவதைக் காண்கின்றோம். விஞ்ஞானத்தால் ஏற்படும் சௌகர்யங்கள் மனித மனத்தை மேலும் மேலும் அத்தகைய சௌகர்யங்களை நாடி அங்கலாய்க்கச்

செய்யுமே தவிர, மனத்துக்கு நிம்மதியோ சாந்தியோ ஏற்படச் செய்யமாட்டா. ''நெய்யினுல் அக்கினி ஆருமல் மேலும் மேலும் ஜொலிப்பது போல் விஷய அனுபவத்தினுல் ஆசைகள் விருத்தியாகுமே தவிரத் தணிவது கிடையாது'' என்பதே ரிஷிகளும், மகான்களும் அனுபவவாயிலாகக் கண்ட முடிவு. சமயம் இம்மைக்குத் தடையானது என்பது போன்ற தவருன கருத்துக்களை மறுத்து அறிஞர் பலர் தாம் எழுதும் நூல்கள் மூலமும் நிகழ்த்தும் உரைகள் மூலமும் சமயக் கோட்பாடுகளுக்குச் சரியான விளக்கங்களைக் கொடுக்க முற்பட்டுள்ளனர். சமய குருமாருள்ளும் பலர் பிறப்பு மட்டும் உயர்வுக்குப் போதாது, சமய அறிவு, கடவுள் பக்தி, ஆசாரம், நேர்மை ஆகியவை பிறப்பைவிட முக்கியமானவை என்பதை உணரத் தொடங்கிவிட்டனர்.

அவ்வாறு உணரத்தொடங்கிய குருமாருள் மாவிட்டபுரத் திருத்தல வரலாறு என்னும் இத் திவ்விய நூலை இயற்றிய பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்களை முன்னணியில் வைக்கத் தக்க ஒருவராகச் சொல்லலாமெனத் தோன்றுகின்றது. இலங்கையிலுள்ள சைவாலயங்களில் இன்றுள்ள அர்ச்சகர்களுள் தமிழிலே நூல் எழுதக்கூடிய ஆற்றலோ ஆர்வமோ உடையவர் மிகமிகச் சிலரே. ஆலயத்திலே நிகழவேண்டிய நித்திய நைமித்தியங்களோடு நில்லாது ஆலயத்தின் மகிமையை ஒரு நூலாக எழுதிச் சைவமக்களிடையே பரப்பவேண்டுமென்ற எண்ணம் பிரம்மஸ்ரீ ஷண்முகநாதக் குருக்கள் மனதிலே தோன்றியது விசேஷமே. அதற்கு வேண்டிய ஆற்றலும் அவரிடம் அமைந்தது அதைவிட விசேஷமே.

ஆலயங்களும் உருவ வழிபாடும் வேதகால ஆரியர்களுக்குக் கிடையாதென்பதும், அவை திராவிட பண்பாட்டில் முகிழ்த்தவை என்பதும் அறிஞர்

கருத்து. ''ஆலயம் தானும் அரனெனத் தொழுமே'' (சிவஞானபோதம்) என ஆலயத்தை அரனுகக் கொள்வது சைவ மரபு. ஆலயங்கள் வழிபாட்டிடங்களென்பது மட்டுமன்றி, கலை கலாசாரம் அனைத்துக்கும் கேந்திர ஸ்தானங்களுமாகும். ஆலயங்களின் புனித நோக்கங்களைச் சரியாக உணர்ந்து முறையாகக் கடைப்பிடிக்கின் சமூகம் முழுவதுமே மேம்மட்டுப் பூரணத்துவ மடையுமென்பது நிச்சயம். காலஞ் சென்ற பிரம்மஸ்ரீ சா. சுப்பிரமணியக் குருக்களும் (இரத்தினக் குருக்கள்) அவருக்குப் பின்வந்தோரும் ஆலயத்தின் நானுவித புனித நோக்கங்களை ஓரளவு உணர்ந்து அவைகளை நிறைவேற்றத் தம்மாலியன்ற வரை முயன்றுள்ளனர் என்பதை இந்த நூலை வாசிப்போர் உணர்வர்.

இத் திருததல வரலாற்றிலே இரத்தினக் குருக்களது திருப்பணியைப்பற்றிக் கூறப்பட்டது சிறிது அதிகமாகிவிட்டதோ என்ற எண்ணம் வாசகர் சிலருக்கு ஏற்படகூடும சில ஸ்தாபனங்களின் வளர்ச்சியிற் குறிப்பிட்ட ஒருவர் இருவருடைய செயல்கள் அந்த ஸ்தாபனங்களின் வளர்ச்சியிலிருந்து பிரிக்க முடியாத அளவு அதனேடு பிணைந்துவிடுவது இயல்பு. இந்த ரீதியிலே பார்க்கும்போது குருக்களையும் அவராற்றிய தொண்டுகளையும் சரியாக அறிந்தவர்கள் இதனை ஒரு குறையாகக் கருதமாட்டார்களென எண்ணலாம்.

இத் திருத்தலம் நிறுவப்பட்டுள்ள இடம் இலங்கையிலுள்ளமையினுலும், இதனைப் புனர்நிர்மாணஞ் செய்தோர் இலங்கையரானமையாலும் இது இலங்கைக்கே சிறப்பாக உரியதுபோலக் காணப்படினும் இதனை முதன் முதற் கட்டுவித்தவர்களையும் அதற்கு வேண்டிய திரவியத்தை வழங்கியவர்களையும் விக்கிரகங்கள் செய்யப்பட்ட இடத்தையும் நோக்குமிடத்து இந்திய மக்களுக்கும் இத் தலத்திலே பெரும்பங்கு

உண்டென்பது இந்நூல்மூலம் நன்கு புலனாகின்றது. இந்தத் தலத்தின் மகிமையையும் இதனோடு தமக்குள்ள தொடர்பையும் இன்று இந்திய மக்கள் பலர் அறியா திருக்கலாம். இந்த நூல் தமிழகத்திலே பரவுவதன் மூலம் இந்தத் தலத்தின் மகிமையையும் அதனோடு தமக்குள்ள தொடர்பையும் அங்குள்ள சைவமக்கள் பலர் அறியும்வாய்ப்பு ஏற்படக்கூடும். இதன் விளைவாக எதிர்காலத்தில் பலர் இத் தலத்தைத் தரிசிக்க இங்கு வரவும் அத்தகைய வருகைகளால் தமிழகத்துக்கும் ஈழத்துக்குமுள்ள கலாசாரத் தொடர்புகள் அதி கரிக்கவும் வாய்ப்பு ஏற்பட இடமுண்டு. அத்தகைய ஒரு நிலைமை ஏற்படின் அதற்கு வழிகோலிய சிறப்பு இந் நூலையே சாரும்.

தமிழகத்திலிருந்து இங்கு வரும் நாதஸ்வர வித் வான்கள் தம் முன்னோர் நிர்மாணித்த தேவஸ்தான மொன்றிலே நாதஸ்வரம் வாசிக்கவும் அதன்மூலம் முருகனுக்கு அஞ்சலி செய்யவும் வழியில்லாது போகக்கூடிய நிலைமை யுண்டென்பது (நூல் 57ஆம் பக்கம்) மகிழ்ச்சிக்குரிய அம்சமாகத் தோனறவில்லை. எதிர்காலத்திலாவது தமிழகத்தி லிருந்து வரும் நாதஸ்வர வித்துவான்கள் மாவை முருகன் சந்நிதி யிலே நாதஸ்வர இசையைத் தத்தம் ஆற்றலுக் கேற்ப இசைத்து முருகன் அருளைப் பெறுவதற்கு ஏற்றவிதமாக இத்தேவஸ்தான நிபந்தனைகள் தளர்த் தப்படுவது நலம்.

இந்த நூல் சரளமான நடையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. பலவிதத்திலும் சிறப்புடைய இந்த நூலை இயற்றிய பிரம்மஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்களவர்கள் பாராட்டுக்குரியவர். யார் யாரெல் லாம் பக்கபலமாக நின்று இக் கைங்கரியத்தில் அவ ருக்குத் துணைபுரிந்தனரோ அவரெல்லாம் பராட்டுக் குரியர்.

30-3-65 **கி. லக்ஷ்மணன்**

# 3

## சைவப்புலவர் வித்துவான்

## வ. செல்லையா அவர்கள்

' புராணபடனம ' நம் நாட்டிற்குப் பழைமையானது. அதனவழி நின்று பயனடைந்தோர் பலராவர். செம் மனச் செல்வர்களாக வாழ அது பெரிதும் உதவி யுள்ளது. அதனுல் ஆலயங்கள், மடாலயங்கள் தோறும் இன்றும புராணபடனங்கள் வழக்கத்தில் உண்டு.

புராணம் என்பதற்குப் பழைய வரலாறு என்பதே பொருளாகும். வேத வேதாங்கங்களிலே உள்ள உண் மைப் பொருள்களை உருவகக் கதைகள் மூலம் புரா ணங்கள் தருகின்றன. இந்த வரிசையில் தலபுராணங் களும இடம்பெறுகின்றன. தல வரலாற்றை, அதன் மகிமையை மக்கள் அறிய அது வாய்ப்பளிக்கின்றது.

ஈழத்திலும் தல புராணங்களுண்டு. அவற்றுள் **நகுலகிரி புராண**மு மொன்ருகும். ஈழத்தின் வடபால் அமைந்துள்ள கீரிமலைச் சிவன்கோவிலின் (நகுலேஸ்வ ரத்தின்) மீது பாடப்பட்ட தலபுராணம் அதுவாகும். அது ஈழநாட்டின் பெருமைகளையும், கீரிமலையின் மகிமைகளையும், கீரிமலை நீரூற்றின் தெய்வீகத் தன்மை களையும் எடுத்துக் காட்டும் ஓர் அரிய புராண நூலாகும்.

இத் தலபுராணத்தின் அடியொற்றியே மாவிட்ட புர வரலாறு உதயமாகின்றது. ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்பினைச் சைவநன்மக்கள் நினைவுக்குக்

கொண்டுவரும்போது கீரிமலே, மாவிட்டபுரக் கந்த சுவாமியார் கோவில் என்பன மறக்கமுடியாதனவாகும். விரத அநுட்டானங்களுக்கும் பிதிர்க் கடமைகள் புரிவ தற்கும் இத்தினம் பெரிதும் பயன்பட்டுவருகின்றது.

**மாவிட்டபுரத் திருத்தல வரலாற்று** ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் இந்நூல்மூலம் ஒரு சாதனேயை நிலேநாட்டுகின்ருர்கள். செய்யுள் வடிவில் அமையவேண்டிய ஒரு நூலேத் (தலபுராணத்தை) தம் நல்லாற்றலின்பாற்படுத்தி எல்லோர்க்கும் பயன்பட வேண்டுமென்ற பெருவிருப்பால் வசன ரூபத்தில் தந் துதவியுள்ளார்கள்.

வரலாறு கற்பனேயோடு அமைதல் கூடாது; உள் ளதை உள்ளபடியே கூறுதல்தான் சிறந்ததென்று 'வரலாற்று வரம்பு' காட்டியதற்கு இந்நூல் ஆசிரியர் போற்றப்படுவாராக.

மாவிட்டபுரம், கீரிமலே, காங்கேசன்துறை ஆகிய முப்பதிகளும் முன்னர்க் 'கோவிற்கடவை' என்ற பெருங் குறிச்சியாக அமைந்திருந்ததென்றும் அற்புத நிகழ்ச்சியால் அங்ஙனமேற்பட்ட தெனறும வரலாற்று மூலங் காணப்படுகின்றது. அதற்கெடுத்தாளப்பட்ட வரலாறு ஆராய்ச்சியோடு அமைகின்றது.

இந்நூலில் பிதிர்ச்சாபம், பாவவிமோசனம், அற்பு தங்கள் என்பன பிற நூல்களின் துணேகொண்டு சான் றுடன் காட்டப்படடுள்ளன. இதனுல் நூல்ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலம் நன்கு விளங்குகிறது.


தேவஸ்தானப் பரிபாலனம் பற்றிய குறிப்பும் இந் நூலில் இடம்பெற்றிருப்பது வரலாற்றுக்கே தனிச் சிறப்பாகும். சைவாதினங்கள் பல இந்தியாவிற் சைவக் கருமங்களே ஆற்றிவருகின்றன. ஈழத்திலும அக் குறைபாடு இலலாதிருக்க மாவிட்டபுரத் திருத்தலச்

சைவாதீன அமைப்பு இருந்துவருகின்றது. ஆலய சேவிதங்களுக்காகப் பரிவார உபயோகம் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. இதற்கெல்லாம் மாவிட்டபுர அந்தணர் மரபு போற்றப் படத்தக்க வகையிற் சீர்குலையாது தில்லையுள்ளாருடன் ஒன்றி வந்தமையே காரணமாகும்.

திருவருள் வாய்ப்புடன் இயற்றப்பட்ட **மாவிட்ட புரத் திருத்தல வரலாறு** சைவநன்மக்களுக்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகின்றேன். இந்நூல் ஆசிரியரின் ஊக்க ஆக்கங்கள் சைவமக்களுக்கு என்றுங் கிடைப்ப தாக. ஆசிரியரின் துணிவு போற்றுதற்குரியது.

**வ. செல்லையா**

'மேழிவாசம்',
இளவாலை,
30-3-65.



இப்போதைய ஆதீனகர்த்தரும்,
நூலாசிரியரின் தந்தையாரும் ஆகும்
ப்ரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்கள்

உ

குகமயம்

# மாவிட்டபுரத் திருத்தல வரலாறு

ஈழநாட்டிலே தமிழர்கள் பல நூற்றுண்டுகள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து தங்கள் ஆதிக்கத்தையுங் கலை கலாசாரங்களையும் பரவச் செய்த வரலாறுகள், சரித்திரத்தில் இடம்பெற்றுள்ளன. தென்னிந்தியாவிலிருந்து ஈழநாட்டைக் கைப்பற்றி ஆண்ட அரசர்களின் வரலாற்றையும் அவர்கள் சமூக, சமய அபிவிருத்திக்கு ஆற்றிய ஆக்க வேலைகளையும் நோக்குமிடத்து, அவர்கள் ஈழநாட்டை ஒரு புண்ணிய பூமியாக ஆக்கவேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. ஈழநாட்டிலே பல தெய்வீக ஸ்தலங்களை நிர்மாணித்து அவற்றை நடாத்து விக்கத் திரவியமும் நெல்வயல்களும் நிவந்தங்களாக வழங்கிய கதைகளும் ஏராளமாக உள்ளன. இது போன்ற வரலாற்றுச் சரிதங்களைக் கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களிலிருந்தும் அறியலாம்.

விஜயன் ஆட்சிக்கு வரமுன்னரே ஈழநாடு திருந்திய நாடாகவும் இராசரீகமுடைய நாடாகவும் இருந்ததென்பதற்கு இங்கே குவேனி அரசியாக இருந்தாள் என்பது ஆதாரமாகிறது. இயக்கர், நாகர் எனும் இருபெரும் இனங்கள் இங்கு வாழ்ந்தன.

விஜயன் ஆட்சி ஆரம்பித்ததும் அக்காலத்திற் சமய நெறிதவறாது வாழ்ந்த மக்களை வசப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தினால் அவர்களின் சமயாசார ஒழுக்கத்தைத் தவறாமற் காத்ததோடு பொதுமக்கள் தாம் தாம் விரும்பியபடி சமய அனுஷ்டானங்களை நடாத்த வேண்டிய வழிகளையும் வகுத்துக் கொடுத்தான். அதோடு தனது அரசாட்சிக்குப் பாதுகாப்பாக நான்கு திக்குகளிலும் நான்கு சிவாலயங்களை எழுப்பினான். கிழக்குத் திசையில் தம்பலகாமத்து கோணேசர் கோவிலையும், தென்திசையில் மாத்துறை சந்திரசேகரேச்சுரன் கோவிலையும், மேற்குத் திசையில் திருக்கேதீச்சுர சிவாலயத்தையும், வட திசையில் * திருத்தம்பலேஸ்வரன் கோவிலையும், இதற்குச் சமீபத்திற் கதிரையாண்டவர் கோவிலையுங் கட்டுவித்ததோடு, கோவில்களை முறையாக நிர்வகிக்கக் காசிப் பிராமணரான நீலகண்டாசாரியரின் மூன்றுங் குமாரன் வாமதேவாசாரியனையும் அவன் கன்னியாகிய விசாலாட்சி அம்மையையும் அழைப்பித்து அக்கிரகாரம் முதலிய வேண்டிய பல வசதிகளையுங் கொடுத்துதவினான். இவ்விடத்தை மக்கள் கோவிற் கடவை என வழங்கலாயினர்.

## நகுல முனிவர்

திருத்தம்பலேஸ்வரி சமேத திருத்தம்பலேஸ்வரன் கோவிலையடுத்து இருடிகள், தபசிகள் பலர் வதிந்து, உலகம் செழிக்க மேன்மையான செபதபங்களை ஆற்றிவந்தனர். அவர்கள் மக்களது பிணிகளையும் நோய்களையும் போக்கினர். மலையடிவாரங்களி

* கீரிமலை சிவன்கோவிலென்று இன்று அழைக்கப்படும் நகுலேஸ்வரம்.

லிருந்து பெருகும் நீரூற்றுக்கள் தெய்வீகத்தன்மை வாய்ந்தனவாக அமைந்தன. மக்களிடையே தோன்றிய எக்கொடிய நோய்களும் இத் தீர்த்தத்திலும் இருஷிகளின் ஜப தப வலிமையாலும் இறைவனின் வழிபாட்டாலுங் குணமடைந்தன. இதன் காரணமாக நாகதுவீபம் என்றழைக்கப்பட்ட இந் நாடு மூர்த்தி தல தீர்த்த விசேஷத்தைப் பெற்றுப் புண்ணியபுரமென வழங்கப்பட்டது. மேரு, இமயம் முதலான மலைச்சாரலிலுள்ள இருஷிகள் பலர் இங்கு வந்து போனமையால் இத்தல விசேஷம் உலகெங்கும் வியாபித்திருந்தது. நகுலமுனிவர் வருகையின் பின்பே இக்குறிச்சி நகுலேஸ்வரம், கீரிமலை, நகுலாசலம் என்ற பல பெயர்களைப் பெற்றது. நகுலமுனிவர் இங்கு வருவதற்குப் பூர்வ கன்ம பாவமொன்றும் அவரைப் பீடித்திருந்தது. இதனை மகாபாரதம் - அஸ்வமேதபர்வணி 92ஆம் அத்தியாயத்திற் காணமுடிகிறது.

## நகுல முனிவரின் பூர்வ வரலாறு

ஒருகால் ஜமதக்கினி முனிவர் தமது தந்தையின் சிரார்த்தத்தைச் செய்வதற்காகத் தங்கள் குல குருவாகிய பிருகு முனிவரை அழைத்திருந்தார். அம் முனிவரும் அழைப்பை ஏற்றுச் சிரார்த்த குருவாக வரச் சம்மதித்தார். சிரார்த்த தினத்தன்று எதிர்பாராதவிதமாக வியாஸ முனிவரும் ஜமதக்கினியின் ஆச்சிரமத்திற்கு வந்திருந்தார் வியாஸர் உயர் குருவாக இருந்ததனால் சிரார்த்த குருவாக யாரை ஏற்பதுஎன்ற குழப்பமான நிலைமை ஜமதக்கினிக்கு எழுந்தது. இதனால் நாழிகையுங் கழிந்து சிரார்த்த வைபவங்கள் தாமதப்பட்டன. இந்தத் தாமதத்தின்

விபரமறியப் பிருகு முனிவர் கிரிவடிவாக உருவெடுத்து ஜமதக்கினி மனையிற் சென்று அங்குள்ள விபரமனைத்தையும் அறிந்து, மடைப்பள்ளியுட் புகுந்து பிதிரர்களுக்குரிய காமதேனுவின்பாலை நஞ்சூட்டி, எச்சிற்படுத்தி, உணவுப் பதார்த்தங்களையும் அப்படியே செய்து தனது இடத்திற்கு ஏகினார். இவ்விபரத்தையறியாத ஜமதக்கினி உணவுப் பதார்த்தங்கள் அலங்கோலப்படுத்தப்பட்டிருப்பதைக்கண்டு கவலைகொண்டார். அழைப்பின்பேரில் வந்த பிதிரர்கள் ஜமதக்கினி தங்களுக்கு மரியாதையேதுஞ் செய்யாமல் இருத்தலையும், தங்களுக்குரிய பால், உணவு ஆதியன எச்சிற்படுத்தப்பட்டிருப்பதையுங் கண்டு கோபமுற்று அம்முனிவரை நோக்கி "உன் குலம் இனி இல்லாமற் போகக்கடவது" எனச் சபித்துத் தமது இருப்பிடங்களுக்குச் சென்றனர். மிகுந்த மனக்கவலையோடு முனிவரானவர் சிரார்த்த குருவான பிருகு முனிவரிடஞ் சென்றபொழுது, பிருகுவும் சீற்றங்கொண்டு தன்னை ஏமாற்றியதற்காகக் "கிரிமுகமுடையவனாய் அலைவாய்" எனச் சபித்தார். ஜமதக்கினி மீண்டும் மிகுந்த கவலையுற்றுத் தன்து இல்லத்தில் நடந்தவற்றை விபரமாக எடுத்துரைத்து, பிருகு முனிவரிடம் சாபவிமோசன வரத்தை இரந்தார். பிருகு முனிவர் இவர் நிலையை உணர்ந்து இரக்கமுற்று இலங்கையின் வடபால் திருக்கம்பலேச்சுரம் எனும் ஸ்தலம் உண்டு. அதனருகே சமுத்திரக் கரையிற் கற்பாறைகளிலிருந்து பெருக்கெடுத்தோடிச் சங்கமமாகும் *'அந்தர் வாவியில்' மூழ்கிச் சிவபூசை செய்துவரின் நின் சாபம் விமோசன

* கிரிமலைத நிர்த்தப பெயர்.

மடையும் என இயம்பினர். அவ்வண்ணமே ஜமதக்கினியும் நாகதுவீபத்துத் திருத்தம்பலேச்சுரம் வந்து தனது நித்ய கர்மானுஷ்டானங்களைக் கிரமமாக அனுட்டித்தபொழுது அவரைப் பிடித்த பிதிர் சாபமும் குரு சாபமும் நீங்கின.

**கீரிமலையின் விசேஷம்**

ஆகவே, 'நகுல முகமடைவாய்' என்ற சாபத்தை ஜமதக்கினி பெற்றதனால் அவரைப் பலர் 'நகுல முனிவா' என்றும் அழைத்தனர். இச் சாபம் நீங்கப்பெற்றமை கோவிற்கடவைக் குறிச்சியில் நிகழ்ந்தமையால் இவ்விடம் **நகுலகிரி, நகுலாசலம், நகுலேச்சுரம்** எனும் சிறப்புப் பெயர்களைப் பெற்றது. நகுல முனிவருந் தனக்கேற்ற இடம் இது தான் என முடிவுசெய்து மலைமுழைஞ்சில் வாசஞ் செய்து திருத்தம்பலேஸ்வரர் ஆலயத்திலே தங்கியிருந்து வழிபாடு செய்துவந்தார். அதனால் திருத்தம்பலேஸ்வரர் கோவிலை **நகுலேசர் கோவிலென்**றும், திருத்தம்பலேஸ்வரியம்மன் கோவிலை **நகுலாம்பிகையம்மன் கோவி**லென்றும் பெயரிட்டு வழங்கி வந்தார்கள்.

[ந + குலம் என்பது குலமின்மை எனவும் பொருள் படும். கிரி என்ற சொல்லிற்கு 'நகுலம்' என்றும் கூறுவர்.]

கீரிமலை பிதிர்சாபம் மாறப்பெற்ற இடமாதலின் இன்றும் சைவசமயிகள் பலர் ஆங்குச் சென்று அந்தியேட்டி, சிரார்த்தம் முதலிய பிதிர்க்கடன்களை இயற்றி வருகிறார்கள். பாரத பூமியிலுள்ள சப்த சிரார்த்த ஸ்தலங்களைப்போல் ஈழநாட்டுச் சைவ சமயிகளுக்கும் இந்த நகுலேச்சுரம் ஒரு புண்ணிய

க்ஷேத்திரமாக விளங்குவதோடு ஆடி அமாவாசை, சிவராத்திரி ஆகிய தினங்கள், தீர்த்த மகிமையை உணர்த்தும் திருநாள்களாக இன்றும் அமைந்துள்ளன.

**உக்கிரசிங்கசேனன் வரலாறு**

பன்னெடுங்காலம் நகுலமுனிவர் தங்கியிருந்து தமது அனுஷ்டானங்களை ஏனையோருடன் சேர்ந்து நடாத்தியபோது, அனேகர் தீர்த்த யாத்திரையாக இங்குவந்து பிறவித் துன்பங்களும் பிணி, நோய் மற்றும் ஏனைய துயரங்களும் நீங்கப் பெற்றார்கள். சாலிவாகன சகாப்தம் கி. பி. 795 இல் விஜயராசனின் சகோதரன் மரபிற் பிறந்த உக்கிரசிங்கசேனன், வடதிசையிலிருந்து எண்ணற்ற சேனைகளோடு ஈழத்திற்கு வந்து போர்தொடுத்து, தலைமுறையாய் இழந்துபோன இவ் விழநாட்டு அரசாட்சியின் அரைவாசியைப் பிடித்துகொண்டு கதிரைமலையைத் தனது இராசதானியாக்கி ஆட்சி நடாத்திவருங்காலை, கோவிற்கடவையிலுள்ள ஆலயங்களின் விசேஷத்தைக் கேட்டறிந்து நகுலேசர் கோவிலைத் தரிசிக்க விரும்பிக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி *வளவர்கோன்பள்ளம் என்னுமிடத்தில் பாளையமிட்டிருந்தான்.

நகுலமுனிவரது ஆசிகளையும் இவ் வரசன் பெற்றுத் தனக்குண்டான பல துன்பங்களையும் போக்கினன். இவன் இங்கு தங்கியிருக்குங்காலை தொண்டைநாட்டரசனை தொண்டைமான், உக்கிரசிங்கசேனனைச் சந்தித்து ஈழத்தில் வடபகுதி

* இது இன்று 'வளவுடை' என வழங்குகிறது.

யில் விளையும் உப்பிலே தமக்கு வேண்டியளவு விலைக்குப் பெறவும், உப்பு விளையுமிடத்துக்குச் சமீபமாகத தமது மரக்கலங்களைக் கொண்டுபோய் உப்பேற்றவும் உத்தரவுகேட்டு அவ்வுத்தரவையும் பெற்றிருந்தான். மரக்கலங்களைக்கொண்டு செல்லத்தக்கதாக வெட்டப்பட்ட வாய்க்கால் இன்றும் 'தொண்டைமாஞறு' என வழங்கப்படுகிறது. இப்படியே உக்கிரசிங்க மகாராஜா அடிக்கடி சுற்றுலா நடாத்துகையிற் கீரிமலைச் சாரலுக்கும் வருவதுண்டு.

## மாருதப்பிரவல்லி

மாருதப்பிரவல்லியின் வருகையின் பின்பே கோவிற்கடவையில் விஜயனுல் எழுப்பப்பட்ட கதிரையாண்டவர் கோவில் பிரசித்தம் அடைந்தது. இக்கோவிலையும் நகுலேசர் கோவிற் சிவாச்சார்யர்களே அவ்வப்போது நிர்வகித்து வந்தனர். மாருதப்பிரவல்லி குன்ம நோயும் குஷ்டமும் குதிரை முகத்தை யொத்த வடிவினையுங் கொண்டதற்கு வரலாறென்று உண்டு.

கலிங்கதேசத்து அரசனொருவனுக்குத் தவத்தாற் பெற்ற பேரழகி ஒருத்தி 'கனகசுந்தரி' எனும் பெயரோடு இருந்தாள். இவள் மூர்த்தி தல தீர்த்த மகிமைகளை விரும்பியறிந்து தல யாத்திரைகள் செய்தும் புண்ணிய தீர்த்தங்களாடியும் மூர்த்திகளைப் பூசித்தும் வருவாளாயினுள். செந்தமிழ் வளர்த்த அகத்தியமுனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலிலுள்ள தாம்பிரவர்ணி நதித் துறையில் ஒருநாள் நீராடுவதற்காக வந்திருந்

தாள். அங்கே இராகம், வெகுளி, காமம், சடம், தீபனம் எனும் பஞ்சாக்கினி காரியங்களையும் நீக்கிப் பஞ்சப்பொறிகளையும் அவித்து, பஞ்சாக்கினி நடுவினின்று அரிய தவத்தைச் செய்யாநின்ற அயுக்கிரீவு முனிவரைப் பார்த்து இம் மங்கை பரிகசித்து நகைத்தாள். அதுகண்ட முனிவரர் சினமேற்கொண்டு, "மங்கையே! நம்மை அவமதித்து நகைத்தனை; அதனுல் நீ வரும் ஜனனத்திற் பலரும் பார்த்து நகைக்கக் கூடியதான குன்மவலியோடு அஸ்வ முகத்தைக் கொள்ளுதி; இதுவே உனது நகைப்புக்குப் பிரதிபலனுகும்" எனச் சபித்தார். சாபத்தால் அதிர்ச்சியுற்ற கனக சுந்தரி மனமுடைந்து முனிவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "நவபெரும் புவனமும் வந்து தொழ வீற்றிருக்கும் தசகாரியத் தாபதரே! 'நுண்ணறிவுடையராய் நூலொடு பழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே' என்றமை தேவரீர் அறிந்ததேயன்றே! அடியேன் புரிந்த குற்றத்தைப் பொறுத்தருளி, சாபம் நீங்கும் வழியையருள்க," எனப் பலமுறையும் இரந்தாள். முனிவரும் இவள் நிலைகண்டு மனமிரங்கி, நல்லுபதேசஞ் செய்து "மடநல்லாய், கடற்றுறைத் தீர்த்தம் ஆடுங்காற் கந்தப்பெருமான் திருவருளால் உனது சாபம் விமோசனமடையும்" என்றுரைத்துத் தன் வழி சென்றுர்.

விதித்த சாபத்தைக கனகசுந் தரியெனு
மெல்லிய றுயரோடுந்
துதித்து நீபகர் கொடுமொழி தவிர்பகற்
சொல்லுதி யெனலோடு

மதித் திருந்தயக் கிரிவனு மவண்முகம்
பார்த்துமா தவனுபி
யுதித்து ளானுக்குப் போந்தலே வருதலே
யுன்னிநோற் றுளன்முன்னம்.''

"புக்கு மச்சன னச்சுமை போயபின்
புவிபொது வறக்காக்கு
முக்கி ரப்பெரு வழுதிபா லுதித்தன
வொளிவனப் புறுமேனி
மிக்க வங்கசுந் தரியெனும் பெயரொடும்
விளங்கினன் பரிபோன்று
தக்க மாமுக மாயினள் வழுதியுஞ்
சஞ்சலித் துடன்சார்ந்தான்.''

— திருச்செந்தூர்ப் புராணம்

*பின்னர் கனகசுந்தரி இறந்து மறுபிறப் பெடுத்து மதுரை மன்னவன் உக்கிரப் பெருவழு திக்குப் புத்திரியாகப் பிறந்தாள். மிக்க அங்க அழகுடன் பிறந்த அப்புத்திரிக்குப் பெற்றோர் '<u>மாருதப்பிரவல்லி</u>' எனவும் '<u>அங்கசுந்தரி</u>' என வும் பெயரிட்டு அன்பாக வளர்த்தனர். சிறிது காலஞ்செல்ல முற்பிறப்பில் முனிவரிட்ட சாபம் கூடுவதற்கு ஆரம்பித்தது. புழுக்கள் வேட்டுவ ஞகவும், வண்டுகள் மயிர்க்குட்டிகளாகவும் மாறி னுற்போல அங்கசுந்தரியும் காலக்கிரமத்தில் உரு மாறிக் குன்ம நோயும் குதிரை முகமும் பெற் றமையால், அரசனும் அரசியும் மிகுந்த வருத்தங் கொண்டு துக்கசாகரத்தில் மூழ்கினர். பல தெய் வங்களை அங்கசுந்தரியின் விமோசனத்திற்காக வணங்கினர். தம் புத்திரியின் க்ஷேமத்திற்காகத் தானதர்மங்களையுங் கோவில் நிர்மாணங்களையும்*

அளவுக்கு மிஞ்சி நடாத்தினர். இவ் வேளையில் ஒருநாள் தன் மகளது வருத்தத்தை நோக்கித் தாங்கவொண்ணுத் துயரத்திலிருக்கும் வேளை "நுங்கள் மகள், குதிரை முகமும் குன்மவலியும் நீங்கப்பெற்று நற்சுகம் பெறவேண்டுமாயின், கடலினும் நதியினும் மூழ்கி வருவாளாக" என்ற அசரீரி கேட்டது. இதைக் கேட்டதும் மன மகிழ்ச்சியடைந்த அரசனும் அரசியும் தமது புத்திரியின் தீர்த்தயாத்திரைக்கான ஆயத்தங்களை உடன் செய்தனர்.

### சாந்தலிங்க முனிவரைச் சந்தித்தல்

நோயுற்ற அங்கசுந்தரி தனது தோழியர்களுடனும் அமைச்சர்களுடனும் பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு, சேரநாடு முதலிய தேயங்களிலுள்ள தீர்த்தங்களிலெல்லாம் ஆடிவருங்காலை, தீர்த்த யாததிரை செய்துகொண்டு தன்து ஆச்சிரமஞ்செல்லும் சாந்தலிங்க முனிவரைக்கண்டு தரிசித்துத் தனது தீர்த்த யாத்திரையின் நோக்கங்களை எடுத்துரைத்தாள். சாந்தலிங்க முனிவரும் இவள் நிலைகண்டு மனமிரங்கி "நீ இப்பொழுது எடுத்த முயற்சியே உனக்குச் சுகம் தரத்தக்கது. இலங்கையின் வடபால் நகுலேச்சுரம் என்ற ஸ்தலமுண்டு. அங்குள்ள மலைச்சாரலிலே சமுத்திரத்தோடு சங்கமமாகும் உத்தம நன்னீர்த் தீர்த்தம் ஒன்றுண்டு. அத் தீர்த்தம் 'அந்தர்வாஹி' எனப் பெயர்பெறும். அது உலகத்திலுள்ள சகல தீர்த்தங்களிலும் விசேஷ தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அங்கு முனிவர்கள் அனேகர் தவஞ்செய்தும், சமயாச்சார அனுஷ்டானங்களை மேற்கொண்டுமிருக்கின்றனர்.

அங்கு நீ போய்த் தீர்த்தமாடிச் சிலகாலந் தங்கி யிருந்தாற் சுகமடைவாய். உனக்கு அங்கு நகுல முனிவர் வேண்டிய உதவிகளை நல்குவர்'', எனக் கூறினர். இதுகேட்ட அங்கசுந்தரி முனிவரது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, இவ் யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்தாள். காவிரிப் பூம் பட்டினத் துறையிலிருந்து புறப்பட்டு இந்து சமுத்திரம் எனும் மகேந்திரக்கடலிற் குளித்து, தெற்கே ஏமகூடம எனப் பெயர்பெற்ற சுப்பிரமணிய துவாதசாந்தத் தலமாகிய கதிர்காமத்திற்குச் சென்று மாணிக்ககங்கையிற் றீர்த்தமாடிக் கதிரை வேற்பெருமானை வணங்கி வருவாளாயினள். அங்கேயும் ''வடகோடியிலே கடற்கரையிற் திவ்விய தீர்த்தமொன்றுளது. ஆங்குச்சென்று காங்கேயனை அன்புடன் நினைத்து மூழ்குவையேல் நின் எண்ணம் நிறைவுறும்'' என அசரீரி கூறிற்று.

### கீரிமலையை யடைந்து நகுலமுனிவரைச் சந்தித்தல்

அங்கசுந்தரியும் மகிழ்ச்சியுற்று வடகடற்றுறை யடைந்து கீரிமலைச் சாரலில் வந்திறங்கி 'வளவர் கோன்' எனும் இடத்திற் பாளயம் போட்டிருந்து தனது விரதத்தை அனுஷ்டிப்பாளாயினள். இந்நாளிற் பல இருஷிகளுடன் சேர்ந்து தவஞ் செய்து கொண்டிருந்த நகுலமுனிவரை விசாரித்தறிந்து, ஆங்குச் சென்று நகுலமுனிவரை முறைப்படி வணங்கி, அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு தனக்குள்ள வருத்தத்தைச் சொல்வாளாயினள். இளவரசியின் வருத்தமுற்ற சம்பவங்களைக் கேள்வி

* இது குமாரத்திபள்ளம் எனப் பின்னர் கூறப்பட்டது

யுற்றதும் முனிவர் அவளைப் பத்மாசனத்தில் இருத்தித் தனது சிஷ்யையாக்கி "மங்கையே, உனக்குத் தெய்வ அருள் கிடைக்கப்பெற்றதால் நீ இவ்விடத்தை வந்தடைந்தாய்; ஆகவே இத்தல மகிமையை யான் கூறுகிறேன் கேட்பாயாக" எனப் பணித்தார்.

**கீரிமலையின் வரலாறு**

"திரேதா யுகத்திலே பரமேஸ்வரன் பார்வதி சமேதராய் இம் மலைச்சாரலில் எழுந்தருளியபோது பார்வதிதேவி நீராடுவதற்காகக் கண்டகி தீர்த்தத்தைப் பரமேஷ்வரனுர் இவ்விடத்திற் சேர்த்துவைத்தார். அத் தீர்த்தத்திலே தேவர்களும் இருடிகளும் பிறரும் தீர்த்தமாடிச் சுகம்பெற்றுப் புண்ணியவான்களாயினர். அதனுற் திரேதா யுகத்தில் இந் நாடு 'புண்ணியபுரம்' எனப் பெயர்பெற்றது. அக் காலததிலே முசுகுந்தச் சக்கரவர்த்தி இவ்விடம் வந்ததுபோல, நானும் என் சாபம் நீங்க இம் மலைச்சாரலிலுள்ள அந்தர்வாவி எனும் கண்டகி தீர்த்தமாடிச் சிவாலயதரிசனஞ் செய்துவருகையில் எனக்குண்டான கீரிமுகம் மாறிச் சுபாவ முகங் கிடைத்தது. அதனுல் அன்றுமுதல் இம் மலைப்பிரதேசத்தை நகுலகிரி யென்றும் நகுலாசலம், நகுலேச்சுரம் என்றும இங்குள்ள ஈஸ்வரன் ஈஸ்வரியை முறையே நகுலேசுவரர், நகுலாம்பிகை என்றும் பெயரிட்டு அழைத்துவருகிறுர்கள். அக் காலத்திற் சண்முகமூர்த்தி சூரசங்காரம செய்து கதிரைமலைக்குச் செல்லுகையில் இம்மலைச்சாரலில் வந்திறங்கி நகுலேசர் கோவிலுக் கருகாமையில் தனக்கோர் ஆலயம் சமைத்துச் சில நாள் தங்கி

யிருந்தார். கலியுகத்திலே இவ்வாலயத்திற்குக் கதிரையாண்டவர் ஆலயமென விஜயராஜனுற் பெயரிடப்பட்டது.

" இரண்டாம் யுகத்திலே 'சித்திராங்கதன்' என்னும ஒரு கந்தருவன் இராவணு வீணையைத் தானும் வாசிக்க வேண்டுமென்ற அவாவினை நெடு நாள் உடையவனு யிருந்தான். தசரத இராமனுல் இராவணனது இருபது கைகளும் அறுத்து வீழ்த்தப் பட்ட சமயத்தில், அவ் வீணையை இக் கந்தருவன் கவர்ந்து கீரிமலையில் வந்திறங்கி வீணையை மீட்கலானுன். அதனுல் இவ்விடம் காந்தருவநகர் எனவும் வீணுகானபுரம் எனவும் வழங்கப்பட்டது.

## நளச் சக்கரவர்த்தி கீரிமலையை யடைந்தமை

" மூன்றும் யுகத்திலே, நிடதநாட்டரசனுன சூர்யகுல அரசன் நளன் என்பான், சூதாடி அரசிழந்து வனவாசஞ் செய்து திரிந்தபொழுது கலியினுலே தனக்கு வந்த இடரை நீக்கவேண்டுமென்ற ஆவலுடன் இலங்கையிலுள்ள கோணேசர் கோயிலை வந்தடைந்தான். அங்கிருந்து வழிபடும் போது ஒரு பெரியார் தோன்றி 'நீ கீரிமலைக்குப் போய்த் *தீர்த்தமாடி நகுலேசப் பெருமானை வணங்குவையேல் உன் கலி தொலையும்' என்று கூறினர். நளனும் கீரிமலையையடைந்து தீர்த்தமாடிச் சிவாலயதரிசனஞ் செய்கையில், நகுலேசப் பெருமான் பிரசன்னமாகி நளனை நோக்கி, 'நீ வேண்டிய பிரகாரம் அருள்பாலித்திருக்கிறேன், போ' என்றருள்புரிந்து தம் கையின் அக்கினி

* இதனைக் கண்டகிதீர்த்தமெனபாரும் உளர்.

யையும், தாமணிந்த சர்ப்பத்தையும் நோக்கி, 'நீங்கள்போய் நளச்சக்கரவர்த்தியை வழியிற் சந்தித்து அவனைப் பிடித்த கலியிடரை நீக்கி வாருங்கள்' என்றுத்தரவு கொடுத்தார். அவ் வண்ணமே நளன் போகும்வழியில் அவ்வக்கினி ஒரு சுவாலைபோல் எரியவும், அச்சர்ப்பமானது சுவாலைக்குள்ளே விழ்ந்து வருந்துவதுபோல் துடிக்கவும், கண்டு அச்சக்கரவர்த்தி பரிதாபப் பட்டு அச்சர்ப்பத்தின் பிராணனை இரட்சிக்க வேண்டுமென்று எண்ணிச் சர்ப்பத்தைச் சுவாலைக் குள்ளிருந்து விலக்கிவிட்டான். உடனே அச்சர்ப் பம் சினந்து அவனைக் கடித்தது. கடித்தமாத்திரத் தில் நளனது தேகம் குட்டைபிடித்தது. அழகு குன்றியது. இதைக்கண்ட நளன் மனங்கலங்கி, 'நான் செய்த பரோபகாரத்திற்கு எனக்குக் கிடைத்த கைம்மாறு இதுவா? சர்ப்பம் தன் சுய புத்தியைக் காட்டிவிட்டதே! இதற்கென் செய் வேன்' என மனங் கலங்கி ஈஸ்வரனைப் பிரார்த் திக்கவும், அச்சர்ப்பம் ஒரு வேதியனாக முன் னின்று 'சக்கரவர்த்தியே! அஞ்சாதே! நான் நகுலேசரது சர்ப்பாபரணமாவேன். நகுலேசப்பெரு மான் உன் வழிபாட்டை ஏற்று உன்னை வருத்து கின்ற கலியிடரை நீக்கி வருமாறு எனக்கும் அக் கினிக்கும் கட்டளையிட்டபடி யாம் வந்தோம். உன்னை இன்னாரென்று ஒருவரும் அறியாதபடி நீ சிலகாலம வேற்றுருவோடு அமைந்திருக்க வேண்டுமாதலால் அவ்வேற்றுரு உனக்குக் கிடைப் பதற்காகவே உன்னைத் தீண்டினேன். இவ் வேற்றுரு வேண்டுமென நீ நினைக்குங்காலை

கிடைக்கும் ; நீங்கவேண்டுமென நீ நினைக்கும் போது அது நீங்கும்' எனக் கூறிவிட்டு அக்கினி யோடு நகுலேசர் சமுகத்தை அடைந்தது.

" இதன்பின்னர் சிலகாலஞ் சென்றபின் அருச்சுனன் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு தென் திசையை நோக்கி வருங்காலை இத்தலத்திற்கும் வந்திறங்கி இங்குள்ள கண்டகி தீர்த்தத்திலாடி நகுலேசப்பெருமான் ஆலயத்தையுந் தரிசித்து நகுலாம்பிகா சமேத நகுலேசுவரரது அருளையும் பெற்று ஏகினன்.

" இக் கலியுகத்திலும் அனேக தவசிரேட்டர்கள் இத் தலத்தின் மூர்த்திதல தீர்த்தச் சிறப்புக்களையும் முன்வைத்து இவ்விடத்திற்கு யாத்திரை செய்கிறார்கள். "இவ்விடத்தைக் கீரிமலை என்றும், மணற்றிடல் என்றும் கூறுவார்கள். இது ஒரு மகா புண்ணிய புரமாகிறது. ஆகவே, நீயும் இத் தீர்த்தந்திலாடிச் சிவாலய தரிசனஞ் செய்வாயானால் உனது பிணியும உனக்குண்டான வருத்தங்களும் நீங்கிச் சுகமடைவாய்"

## குதிரைமுகம் நீங்குதல்

இவ்வாறு முனிவர் பெருமான் அங்கசுந்தரிக்கு எடுத்துரைத்தார். மிகுந்த பணிவுடனும் குருபக்தியுடனும் அன்புடனும் இவ் வரலாறுகளைக் கேட்டறிந்த மாருதப்பிரவல்லி மீண்டும் முனிவரை வணங்கி, கூறப்பட்ட மூர்த்திதல தீர்த்த விசேஷங்களையும் மகிமைகளையும் மீண்டும் மீண்டும் நினைவுகூர்ந்து சதா கந்தப்பெருமானது

தியானத்திலும் ஈஸ்வர தியானத்திலும் மூழ்கினவளாய் முறையாகச் சங்கற்பித்துத் தீர்த்தமாடிச் சிவாலயதரிசனஞ் செய்து வருவாளாயினள். இவள் தனது தேகம் விகாரப்பட்டிருந்ததாற் பிறரறியாதவாறே தீர்த்தமாடப்போக நினைந்து அவள் தங்கியிருந்த இடமான குமாரத்திபள்ளத்திலிருந்து தீர்த்தக்கரை வரை ஒரு சுரங்கத்தை வெட்டுவித்து அதன் வழியே சென்று தீர்த்தமாடி வருவாளாயினள். நாட்கள் செல்லச்செல்ல இவளது முகம் மாறப்பெற்று நோயும் நீங்கியது. விகாரமடைந்த அவளது உடம்பு சுகமடைந்து அழகுடன் கூடிய யௌவன சொரூபத்தைப் பெற்றது. நகுலமுனிவரதும் இன்னும் பல இருடிகளினதும் ஆசிகளோடும் தெய்வத்திருவருளினாலுஞ் சுகமடைந்த மாருதப்பிரவல்லி இவ்விடத்தை மகாபுண்ணியபுரமாக்க வேண்டுமென்றும் மக்களனைவருஞ் சுகமாக வாழ வேண்டுமென்றும் நினைத்து அதற்கேற்ற கருமங்களைச் செய்யமுனைந்தாள். தான் சுகமடைந்துவிட்ட செய்தியையுந் தனது அவாவினையுந் தனது தாய் தந்தையருக்கும் மற்றுஞ் சுற்றத்தாருக்கும் அறிவித்தாள். இவ் வேளையில், ஒருநாள் நகுலேசப் பெருமான் கனவிற்றோன்றி, "பெண்ணே நீ உனது எண்ணத்தை நிறைவேற்றவும் எல்லா உயிர்களுஞ் சுகம்பெறவும் கதிரேசன் கோவிலைப் புதிதாக நிர்மாணி" எனத் திருவருள்பாலித்தார். மிகுந்த மகிழ்ச்சியுற்ற இளவரசி தான் தினசரி வணங்கி வந்த கதிரேசன் கோவிலைப் புதிதாக நிர்மாணிப்பதற்கான ஆயத்தங்களை உடனேயே செய்ய ஆரம்பித்தாள். குதிரைமுகமாக விகாரமடைந்திருந்த

இளவரசியின் முகம் மாறப்பெற்ற காரணத்தால் இவ்விடத்திற்குத் 'துரகானன விமோசனபுரி' எனப் பெயரிடப்பட்டது. அக்காலத்திலிருந்தே இன்றும் இங்கு இக்கோவிலில் அனுஷ்டிக்கப்படும் பூஜை வழிபாடுகளைக்கொண்ட பத்ததியொன்றில் இவ்விடம் 'துரகானன விமோசனபுரே!' என்று குறிப்பிடப்பட்டுள்ளதைக் கீழ்வருஞ் சுலோகங்களால் அறியலாம் :

> "ஸ்ரீமத் காவேர்யாஹ தக்ஷிணதீரே, ஸமுத்திரஸ்ய பஸ்சிமதடே, பாஸ்கரக்ஷேத்ரே துரகானன விமோசனபுரே, அஸ்யதேவ தேவஸ்ய மஹாவல்லி கஜவல்லி ஸமேத ஸ்ரீ சுப்பிரமண்ய பரமேஸ்வரஸ்ய......"

'துரகானன விமோசன புரே' என வடமொழியில் வழங்கப்பட்ட இவ்விடம் அதே பொருள்பட 'மா-விட்ட-புரம்' எனத் தமிழில் வழங்கலாயிற்று. மாருதப்பிரவல்லியின் நோன்பின் மகிமையை எங்கும் மக்கள் குதூகலமாகப் பேசலாயினர். கோவிற்கடவைக் கதிரேசன் கோவிலைப் புதிதாக நிர்மாணிக்கவேண்டிய ஆலோசனைகள் நடைபெற்றன. முற்றிலுஞ் சிற்பசாஸ்திர விதிகளுக் கமைவாகவும ஆகம சாஸ்திரங்களிற் கூறிய பிரகாரமாகவும் இக் கோவிலை ஸ்தாபிக்க முடிவு செய்து அதற்கு வேண்டிய சிற்பாசாரிகள், சிவாச்சாரியர்கள், சேவகர்கள் இன்னும் மற்றும் வல்லுநர்களையுந் திரவியம், பொன், பொருள் ஆகியவற்றையும் அனுப்பிவைக்கும்படி இளவரசி தனது தந்தைக்குத் திருமுகம் அனுப்பினாள்.

2

**கோவில் கட்டுதல்**

தனது மகள் தனக்குண்டான பிணி மாறப் பெற்று ஒரு கந்தசுவாமி கோவிலைக் கட்டுவிக்க முற்பட்ட செய்தியை மதுரைமன்னன் — திசையுக்கிரப் பெருவழுதி — அறிந்ததும் மன மகிழ்ச்சியடைந்து உள்ளப் பூரிப்போடு கட்டிடம் சமைக்க வல்ல சிற்பாசாரியர்களையும், ஏனைய வல்லுநர்களையுந் தேவையான பொருள்களையுந் திரவியங்களையும் உடனேயே அனுப்பிவைத்தார். ஒரு சுப முகூர்த்தத்திலே இவை யாவும் மாவிட்டபுரத்திற்கு வந்தடைந்தன. சாஸ்திரவிதியின் பிரகாரம் அஸ்திவாரமிடப்பட்டு ஆலய நிர்மாண வேலைகள் துரிதமாக நிகழ்ந்தன.

இவ்வாலயத்தின் மூலஸ்தானத்திலே ஸ்தாபிக்கவேண்டிய கந்தசுவாமி, தெய்வானையம்மன், வள்ளியம்மன் விக்கிரகங்களைச் சமைப்பதற்குத் தமது இராஜதானியிலுள்ள சிற்ப வல்லுநர்களை அழைத்தான்; விதிகளுக்கமைவானதும், உத்தமோத்தமமான விசேஷங்களைக் கொண்டதும், உரிய இலக்ஷணங்களோடுள்ளதுமான விக்கிரகங்களை உருவாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்தான். உரியகாலத்தில் இவையாவுஞ் செய்யப்பட்டன.

**விக்கிரகங்கள் வருதல்**

திசையுக்கிரப் பெருவழுதி மன்னன் தான் உருவாக்கிய இந்த விக்கிரகங்களை இங்கு அனுப்பிவைக்க விரும்பினர். அவற்றைத் தாங்கிச் செல்வதற்கும் நித்திய நைமித்தியங்களைப் பிழையில்லாது

சரிவர நடப்பித்தற்கும் தில்லை மூவாயிரவரில் ஒருவரை இங்கு அனுப்ப எண்ணினன். அதனல் அச்சிவாலயத் தலைவருக்குத் தன் எண்ணத்தை அறிவித்து உடனே தில்லை மூவாயிரவருள் ஒருவரை அனுப்பிவைக்கும்படி கட்டளையிட்டான். இதனைக் கேட்ட தில்லை மூவாயிரவர், 'தோணியேறுவதும் கடல்கடந்து குடியேறுவதும், மகாதோஷமாக எமக் கிருக்கையில், அரசன் இப்படிக் கட்டளை பிறப்பிக் கிருனே, யாம் யாதுசெய்வோம்,' என ஏங்கினர். அதனல் தில்லைச் சிவாலயத்திலேயே பட்டினிகிடந்து கவலையோடு வாடினர்கள். தமது நித்திய கர்மானுஷ்டானங்களைச் சரிவர நடாத்தியும், எள்ளளவேனும் தமது சமயாசார ஒழுக்கங்களிற் பிறழாது ஒழுகியும் வருபவர்களான இத் தில்லை மூவாயிரவரது வருத்தத்தைச் சிவபெருமான், அறிந் தார். அவர் அவ் மூவாயிரவரது முதல்வரின் கனவிற்ருேன்றி "நகுலமலைச் சாரலானது அங் குள்ள புண்ணிய தீர்த்தத்தினலும் சிவாலய மகத்துவத்தினலும் மகாதிவ்வியக்ஷேத்திரமாக விளங்குகிறது. காசிப் பிராமணர்களும் அங்கு வதிகிருர்கள். முக்கால ஞானிகளும் தபசிரேட்டர் களும் அங்குள்ளனர். பிராமணர்கள் தங்களது மேலான நியமநிட்டைகளை வழுவாமற் செய்வதற்கு மரக்கலங்களில் இராத்தங்காமல் ஏறலாம். நகுல முனிவரும் அவருடன் இன்னும் பல முனிவர்க ளும் ஆங்கிருக்கையில் அங்குப் போவதையிட்டு யோசிப்பதென்னை? யாதொரு யோசனையுமின்றி ஒருவரை அங்கு அனுப்புதி" எனப் பணித்தார். இவ்வுத்தரவையறிந்த யாவருங் கவலை நீர்ந்து தீட்சிதராகிய பெரியமனத்துள்ளார் என்பவரை

நியமித்து, சோழராசனிடம் அனுப்பிவைத்தனர். சோழராசனும் மகிழ்ச்சியடைந்து தீட்சிதருக்கு வேண்டிய யாவற்றையும் நல்கி, கந்தசுவாமி, தெய்வானையம்மன், வள்ளியம்மன் விக்கிரகங்களையும் ஏனைய விக்கிரகங்களையுந் தீட்சிதர்கையில் ஒப்புவித்து ஒரு சுபமுகூர்த்தத்திலே மரக்கலத்தினூடாக இங்கு அனுப்பிவைத்தார்.

ஒருகால் மக்கள் கூட்டங் கூட்டமாக 'கயாவுக்கு யாத்திரைபோக மரக்கலமேறுந் துறைமுகமாக ஓரிடத்தை, இப்பகுதிச் சமுத்திரக் கரையோரமாக, நியமித்திருந்தனர். அதனால் அவ்விடம் 'கயாத்துறை' என வழங்கப்பட்டுக் 'கசாத்துறை' என மாறியது.

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து விக்கிரகங்களையும், தீட்சிதரையும், ஏவலாளர்களையும் இன்னும் வேறு பொருள், பண்டம், திரவியம் ஆகியவற்றையுங் கொண்டு புறப்பட்ட மரக்கலம் சுபநேரத்திலே இக் கசாத்துறைக்கு வந்தெய்தியது. இச் சுபசெய்திக்காகத் துறைமுகத்திலே காத்திருந்த மாருதப்பிரவல்லியும், இருஷிகள் பலரும், மகாஜனங்களும் மரக்கலத்தைக் கண்டதும உள்ளம் பூரிப்படைந்தனர். எல்லோரும் ஆனந்தக்கண்ணீர் ஊற்றெடுக்கத் துதிப்பாடல்களைப் பாடினர். வாத்திய இசைகள் ஒலிக்கக் 'காங்கேயன்' என்னும் மறுபெயர்கொண்ட கந்தசுவாமி விக்கிரகமும் தெய்வானையம்மன் வள்ளியம்மன் விக்கிரகங்களும் மரக்கலத்திலிருந்து இறக்கப்பட்டவுடன் ஏனைய பொருள்களுங் கிரமமாக இறக்கப்பட்டன.

தீட்சிதரின் ஆலோசனைக் கிணங்க இக் கயாத்துறைக்கு, — 'காங்கேயன்' எனும் மறுநாமங்

கொண்ட கந்தசுவாமி விக்கிரகம் இங்கு இறக்கப்பட்டமையால் — காங்கேயன்துறை என நாமமிடப்பட்டது. அன்று முதல் இன்றுவரை இத்துறைமுகம் 'காங்கேயன்துறை' என்றே வழங்கி வருகிறது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்திற் பிரதிஷ்டை செய்யவேண்டிய விக்கிரகங்களும் மற்றும் பொருள்கள், திரவியங்கள் யாவுந் தீட்சிதரின் மேற்பார்வையில் அவருக்கென நிர்மாணிக்கப்பட்ட அக்கிரகாரத்தில் வைக்கப்பட்டன. இவருக்கு உதவியாக மகாவட்டன் என்ற தளபதியும் ஆலய நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்து வந்தான். சுற்றுமதில்கள், கோபுரங்கள், ஊழியர்களுக்கான விடுதிகள், சாலைகள் யாவும் விரைவாகவுஞ் சிறப்பாகவுங் கட்டப்பட்டன.

**உக்கிரசிங்கசேனனின் காதல்**

இந்நாளில் உக்கிரசிங்கசேனன் தனது இராச்சிய பரிபாலனத்தைச் சுற்றிப்பார்க்க எண்ணி ஒரு யாத்திரையை மேற்கொண்டபோது நகுலேசப் பெருமானைத் தரிசிக்க வந்திருந்தான். அங்கு வழமையின்படி நகுலேசப் பெருமானைத் தரிசிக்க வந்திருந்த மாருதப்பிரவல்லியைக் கண்டான். இராஜகன்னிகையை யொத்தவளாகவும், அழகும் யெளவனமும் மிகுந்தவளாகவுங் காணப்பட்ட மாருதப்பிரவல்லியைக் கண்ட உக்கிரசிங்கசேனன் தன்னையே மறந்து இவள்மேற் காதல் கொண்டான். பின்னர் அரசன் தனது மந்திரிகளினூடாக மாருதப்பிரவல்லியின் வரலாற்றை யறிந்து அவள் நடப்

பித்துவரும் ஆலய நிர்மாணங்களையுங் கண்ணுற்று, அவளோடு உரையாட எண்ணித் தூதர்களை அனுப்பினன். தூதர்கள்மூலம் உக்கிரசிங்கசேனனை அறிந்த மாருதப்பிரவல்லி அரசனது நேர்முக உரையாடலுக்கு மறுத்தாள். இதனைத் தூதர்கள் அரசனிடஞ் சென்று தெரிவித்தனர். எப்படியாவது இவளோடு பேசவேண்டும் என்ற மனப்பான்மை மேலிடவே, அன்றிரவு சேடியர், காவலர் தூங்குஞ் சமயம் பார்த்து அவள் உறையுமிடத்தை யடைந்து உக்கிரசிங்கசேனன் அவளைக் கவர்ந்து தானிருந்த பாளையத்திற்குக் கொண்டு சென்றான்.

## மாருதப்பிரவல்லி பட்டத்தரசியாதல்

மாருதப்பிரவல்லி இச் செயலைக் கண்டித்து, தான் பூண்டிருக்கும் விரதம், நடாத்தும் ஆலய நிர்மாண வேலைகள் ஆதியனவற்றை எடுத்துரைத்தாள். அரசனும் இவற்றை உணர்ந்து அவளின் விருப்பப்படியே எதையும் நடாத்தச் சம்மதித்துத் தனது பாளையத்திலிருந்தே கோவில் நிர்மாண வேலைகளைச் செய்துவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்தான். மறுநாட் காலை தனது எஜமானியைக் காணது மிகவுந் துயரமும் பரபரப்புமடைந்த காவலர்கள், அமைச்சர்கள் யாவருந் துடிதுடித்து, எங்குந் தேடியுங் காணது, ஈற்றில் உக்கிரசிங்கசேனன் பாளையத்தில் அவள் இருப்பதை அறிந்தனர். ஆங்குச் சென்று தங்களது நிலையை எடுத்துரைத்து "நாங்கள் இனி என் செய்யலாம்?" எனக் கேட்க, அரசன் "மாருதப்பிரவல்லி என் பட்டத்தரசியாகிவிட்டாள். இந்தச் சுபசெய்தியை உங்கள்

மன்னனிடம் உடனே அறிவியுங்கள்" எனக் கூறி வழிச்செலவிற்குப் பொருள்களுங் கொடுத்தனுப்பினன். அவ்வண்ணமே, மாருதப்பிரவல்லி யின் சமாச்சாரத்தைத் தூதுவர்கள் அவள் தந்தை திசையுக்கிரப் பெருவழுதியிடம் அறிவித்தனர். மன்னன் உடனே மந்திராலோசனை நடாத்தி மனமகிழ்ந்து உள்ளப்பூரிப்போடு உக்கிரசிங்க சேனன்–மாருதப்பிரவல்லியின் விவாகத்தை அங்கீகரித்தான். இக் கோவிலின் திருப்பணி வேலைகள் பூர்த்தியான பின்புதான் தமது விவாகத்தை நடாத்தவேண்டுமென்ற இளவரசியின் பிடிவாதத்தின் காரணமாக உக்கிரசிங்கசேனன் தனது தலைநகருக்குச் செல்லாது இத் திருப்பணி வேலைகளைத் துரிதமாக முடிப்பதற்கான கடமைகளில் ஈடுபட்டான். இதனுல், திருப்பணிகள் வெகு சீக்கிரம் முடிவடைந்தன. ஆனிமாத உத்தரநக்ஷத்திரத்தன்று எல்லா மூர்த்திகளுக்குங் கும்பாபிஷேகஞ் செய்து வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இருபத்தைந்துநாள் மகோற்சவங்களும் நடைபெற்றன. மாருதப்பிரவல்லி, ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஈருகவுள்ள எல்லா உற்சவங்களையுந் தரிசித்து, ஆலய நிர்வாகஞ் செவ்வனே நடைபெற்று வர வேண்டிய ஒழுங்குகளைச் செய்துவைத்துத் தீட்சிதரிடம் யாவற்றையும் பொறுப்பளித்து, அவரிடமும் நகுலமுனிவரிடமும் மற்றும் ஏனையோரிடமும் விடைபெற்றுக்கொண்டு முக்கிய பிரமுகர்கள் புடைசூழ உக்கிரசிங்கசேனனுடன் கதிரைமலைக்கு ஏகினுள்.

அரசகுமாரி தனது கண்காணிப்பிற் கட்டுவித்துக் கும்பாபிஷேகஞ் செய்து வைத்தமைபற்றி நகுலகிரிப் புராணத்திற் பின்வருமாறு வர்ணிக்கப்பட்டிருக்கிறது :

" நீள்பெருங் கோயிலு நிகரில் கோபுரஞ்
சூழ்தரு நெடுமதில் சுடர்கள் கான்றுறத்
தாழ்வகன் றிடுமறு கோடுந் தந்துநன்
னாளினிற் கந்தவேள் தனை நயப்புடன்."

" செப்பருங் கும்பதா பனங்கள் செய்திடா
தொப்பிலா மறைமுறை யொளிரு நல்லருள்
வைப்பினு வாகன பதிட்டை தன்னைமுன்
தப்பிலாக் குமரவேள் தனக்குச் செய்தனள்."

உக்கிரசிங்கசேனராஜனுக்கும் மாருதப்பிர வல்லிக்கும் கதிரைமலையிற் சோழ அரச பரம்பரை மரபிற்கமைவாக வெகு உற்சாகத்தோடும் விமரிசையாகவும் திருமணம் நடந்தேறியது. சிலகாலஞ் சென்றபின் மாருதப்பிரவல்லி தலயாத்திரை செய்துவரும்போது கோணேச கிரிக்குச் சென்று தீர்த்தமாடிக் கோணேசரைத் தரிசித்து அங்குள்ள பூசகர்க்குப் பட்டாடையும் பொன்னும் மணியும் வழங்கி அவர்களது ஆசிகளையும் பெற்றனள். இப்படியிப்படியே எங்கெங்குச் சென்றுளோ அங் கெல்லாந் தானதர்மங்கள் இயற்றி ஆலயங்களைக் கட்டுவித்து மீண்டும் நகுலகிரிக்கு வந்து நெடுங் காலமாக மாவிட்டபுரம் கந்தசுவாமியாரை வணங்கி நல்லருள் பெற்றுக்கொண்டு கதிரைமலைக்கே நிரந் தரமாக வாசஞ் செய்யும் நோக்கத்தோடு புறப் பட்டாள்.

**மாவிட்டபுர ஆதீனம்**

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மேற் பார்வை நிர்வாகம், பராபரிப்பு ஆதியாம் பொறுப் புக்களைப் பெற்றுள்ள தீட்சிதர் பெரியமனத்துள்ளார்

பிரமச்சாரியாராகவே வாழ்ந்து வருவதைக் கண்ட மாருதப்பிரவல்லி, தில்லைவாழ் அந்தணப் பெண்கள் கடல் கடந்து வரமாட்டார்களாதலால், தீக்ஷிதருக்கேற்ற ஒரு பெண்ணைத் தேட ஆரம்பித்தார். கீரிமலையில் வாசஞ் செய்துவந்த சாம்பசிவ ஐயரின் மகள் வாலாம்பிகையைத் தீக்ஷிதருக்கு விவாகஞ் செய்துவைத்தனள். அப்பெண்ணின் பெயரைத் தில்லைநாயகி என மாற்றிக் கோவிலின் தெற்கு வீதியிலுள்ள அக்கிரகாரத்திலே குடியேற்றி அவர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையுஞ் செய்து கொடுத்தாள். அன்று தொடக்கம் இன்றுவரை இக்கோவிலின் ஆதீனகர்த்தாக்கள் பரம்பரை பரம்பரையாக இவ்வக்கிரகாரத்திலேயே வாசஞ்செய்து வருகிறார்கள். கோவிற் கலைஞர்களைக் கௌரவித்தல், அவர்களுக்கு வருஷப்பிறப்புத் தினத்திலே உடை தானியம் வழங்கிவருதல் ஆதியாம் உபசரணைகள் இன்றும் இவ்வக்கிரகாரத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆதியில் தீட்சிதர் பெரியமனத்துள்ளார் பொறுப்பில் எப்படி ஆலய நிர்வாகம், பரிபாலனம், பொருட் சேகரம் ஆதியன இருந்ததோ அதே போல், அவரைத்தொடர்த்து வந்த ஆதீனகர்த்தாக்களும் அதேபிரகாரம் பொறுப்பேற்று நடாத்திவந்துள்ளனர். ஆதிகாலச் சில சின்னங்களை இன்றும் இவ் அக்கிரகாரத்திற் காணமுடிகிறது.

மகோற்சவ ஆரம்ப காலத்தின் முதல் நாள், உற்சவங்களுக்கான திரவியங்கள் முதலானவற்றையும் இவ் அக்கிரகாரத்திலிருந்தே மங்கள வாத்தியங்களுடன் கோவிற் கலைஞர்கள், சிப்பந்திகள்

புடைசூழ ஆதீனகர்த்தாவின் தலைமையிற் சிவாச்சார்யர்கள் எடுத்துச் செல்வர். இன்றும் இவை நடைபெற்று வருகின்றன. சோழ அரச குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் அன்று முதல் இன்றுவரை மரபு பிறழாது புதுச் செருகல்களைப் புகுத்தாது ஆதியில் அமைக்கப் பட்ட பிரகாரமே சகல கிரியைகளுங் கருமங்களும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

உக்கிரசிங்கசேனனும் மாருதப்பிரவல்லியும் கதிரைமலையிலிருந்து சிலகாலஞ் சென்றபின் செங் கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அர சாண்டு வருங்காலத்திற் சகல இலட்சணங்களையு முடைய ஒரு புத்திரனையும், மகாலட்சுமிபோன்ற ஒரு புத்திரியையும் பெற்றெடுத்தனர். இவர்களுக்கு 'நரசிங்கராஜன்' என்றும் 'செண்பகாவதி' என் றும் நாமமிட்டனர். வயது வந்ததும் இவர்களுக்குத் தகுந்த விவாகத்தை நடாத்தி மகனுக்கு முடிசூட்டி அரசாள வைத்து, சில நாட்கள் செல்ல உக்கிர சிங்கசேன மன்னன் இறைவனடி சார்ந்தான். நரசிங்கராஜன் 'செயதுங்கவரராஜசிங்கன்' எனும் பட்டத்துடன் முடிசூட்டப்பெற்று முழுஅரசாட்சியை யும் ஒப்புக்கொண்டான். மாருதப்பிரவல்லியோ சிவாலய தரிசனத்திலுந் தீர்த்த யாத்திரையிலுந் தனது காலத்தைக் கழித்தாள். ஈற்றிற் கதிரைமலை யிலே தங்கியிருந்தகாலை இறைவனடி சேர்ந்தாள்.

## சிங்கையாரியனும் புவனேகபாகுவும்

இலங்கையில் அரசாட்சிசெய்த சோழ அரசர் களும் மற்றும் பெரிய உத்தியோகத்தர்களும் இவ் வாலயத்தின்மீது அதிக அக்கறைசெலுத்தி வந்த

னர். இக்கோவிலின் அமைப்பு, கோவிற் கலைஞர்களது திறமை, பூசைகளின் மகிமை, சுற்றுடலின் அழகு ஆதியன எல்லோரையுங் கவர்ந்தன. நல்லூர்க் கந்தசுவாமிகோவில் திருப்பணி வேலைகளைச் செய்த சிங்கையாரிய மகாராஜனும் மந்திரி புவனேகபாகுவும் நகுலகிரிக்குச்சென்று தீர்த்தமாடி, சிவாலய தரிசனஞ் செய்துகொண்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் வலம்வந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு தீக்ஷிதரது அக்கிரகாரத்திற்குச் சற்று இளைப்பாற வந்தனர். அப்போது நண்பகலாதலினால் இவர்களுக்கு விருந்திட முனைந்த தீட்சிதர் பெரியமனத்துள்ளாரின் குமாரர் சிதம்பர தீட்சிதரின் மகனார் சின்னமனத்துள்ளார் சுறுசுறுப்புடன் அறுசுவை உணவைத் தயாரித்தளித்தார். விருந்தோ வெகு கச்சிதமாகவும் மகாவுசிதமாயுமிருந்ததினால் அவ்விருந்திற் பரிமாறிய ஒவ்வொரு பதார்த்தத்துக்கும் ஒவ்வொரு பாட்டை உடனுக்குடனாகவே மந்திரி புவனேகபாகு பாடினார். இப்பாடல்கள் அனேகம் கைக்குக் கிடைக்கவில்லை. இரு பாக்களே கைக்குக் கிட்டியவை.

அவை பின்வருமாறு :

"இன்னமுத விண்டுவிஷ்ணோர்க கிந்தசெய லன்னதுவாம்
மன்னவனுந் தொக்க வருதிவிழும்—நன்னரு(ண்)ண
அன்னமளித் திந்நாளி லாதரவு தந்துநின்ற
சின்ன மனத்தான் செயல்."

"சின்ன மனத்தான் செயும்விருந்திற் சாற்றுருசி
அன்னதனை விண்ணோ ரறிந்திருந்தால்—முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்து வேலைகடைத் தேயுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்."

இப்படியே விருந்து முடிந்ததும் ஆலய விசாரணைகளை நடாத்தி ஆலயத்திற்கு வேண்டிய ஒழுங்குகளையுஞ் செய்துகொண்டு திரும்பினர். அன்றுமுதல் இற்றைவரை இலங்கையை யாண்ட தேசாதிபதிகள், பிரதம மந்திரிகள், மற்றும் பிரபல முக்கியஸ்தர்கள் வடபகுதிக்கு வருங்காலை இக் கோவில் ஸ்தலத்துக்கும் வந்து ஆதீனகர்த்தாக்களைச் சந்தித்து வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்பதோடு அவர்கள் அளிக்கும் வரவேற்புபசாரங்களிற் பங்குபற்றி வருவதுங் குறிப்பிடத்தக்கது.

**பறங்கியர்களின் கொடுமை**

பெருமையோடுஞ் சிறப்போடுந் தெய்வீக சக்தியோடும் விளங்கிய மாவிட்டபுரம் பிறமத அரசாட்சியாளர்களின் மனதிற் பொருமையை உண்டாக்கியது. வியாபாரத்தை அடிப்படையாகக்கொண்டு நாடு பிடிக்கும் நோக்கோடு ஈழநாட்டிற்கு வந்த பறங்கியர் தங்கள் சமயத்தைப் போதிக்கவும் தங்களது ஆட்சியை நிலைநாட்டவுந் திட்டங்களை வகுத்தனர்; ஆலயங்களை இடித்தும் சைவமரபோடு வாழ்ந்த சைவர்களுக்குக் கேடு விளைவித்தும் சிவாசாரியர்களுக்குத் தீங்கிழைத்தும் பற்பல கொடுமைகளை விளைவித்தனர்; மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலையும் இடித்தனர்; அங்குள்ள வேதியர்களைத் துன்புறுத்தி இடம்விட்டு ஓடச் செய்தனர்; கோவிலை இடித்த கற்களாற் கோட்டைகளையும், தங்கள் மதக்கோட்பாடுகளுக் கமைவான ஆலயங்களையுங் கட்டினர். மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிலை இடிக்கும்போது அப்போ

திருந்த வேதியர்களும் பணிவிடைகாரர்களும் அங்குள்ள விக்கிரகங்களையுந் தளபாடங்களையுந் திருமஞ்சனக் கிணற்றுளிட்டுப் பாதுகாப்போடு மூடி வைத்தனர். *கோவிற் பணிவிடைகாரனாக இருந்த 'குமாரசாமி' அல்லது 'சங்கிலி' எனும் பண்டாரம் இவ்வாலய வரலாற்றையும் சம்பவங்களையும் ஒழுங்குத் திட்டங்களையும் அடக்கிய செப்புப் பட்டயத்தைக் கவர்ந்துகொண்டு மட்டக்களப்புக்கு ஓடியதாகச் செய்தியொன்றுண்டு. பறங்கியர் காலந் தொட்டு ஆங்கிலேயர் காலம்வரை, இவ்வாலயத்தை இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட இடத்தை இக் கோவிலைச் சார்ந்தவர்கள் மிகுந்த பயபக்தியோடு கண்ணுங் கருத்துமாகப் பேணி வந்தனர்.

### ஆங்கிலேயர் ஆட்சியில் ஆலயவளர்ச்சியும் ஆதீனகர்த்தாக்களும்

ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்பமானதும் ஈழ நாட்டிலுள்ள பல்வேறு மதத்தினருந் தத்தமது சமய அநுட்டானங்களை நடாத்தச் சுதந்திரங் கொடுக்கப்பட்டது. அப்போது இக் கோவிலின் பரிபாலகராக வரவேண்டிய சபாபதி ஐயர்அவர்கள் மகிழ்ச்சி பொங்க மீண்டும், இக் கோவில் பொலிவுடன் விளங்கவேண்டுமெனக் கருதி, அதற்கான ஆயத்தங்களைச் செய்தார். வெகு விரைவிலே சுற்று மதில்கள், பிரகாரங்கள், மண்டபங்கள் ஆதியனவற்றை நிர்மாணித்து விக்கிரகங்களையும் அவ்வவ் ஸ்தானங்களில் ஸ்தாபித்து ஆனி உத்தர நக்ஷத்திரத்தில் மகாகும்பாபிஷேகத்தையுஞ் செய்துவைத்தார்.

---

* யாழ்ப்பாண வைபவமாலையில் இந் நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கச்சேரியிலுள்ள கோவில் களின் இடாப்பின் பிரகாரம் இப்போதுள்ள கோவில் 1782ஆம் ஆண்டில் குமாரசாமிக்குருக்கள் சபாபதிக்குருக்கள் அவர்களாற் கட்டப்பட்டதென அறியப்படுகிறது. ஆகம விதிகளிற் கமைவாக உரிய இலக்ஷணங்களோடு அமைக்கப்பட்ட இவ் வாலயம் ஈழமண்டலம், பாரததேசம், தூரகிழக் குத் தேசங்களான சிங்கப்பூர், மலேயா, போர் னியோ போன்ற இடங்களிலெல்லாம் பிரசித்த மடைந்தது. மாவைக் கந்தனை நினைந்து வழிபடுங் கால் அவரவர்கள் தங்கள் இஷ்டசித்திகளைப் பெற்று உய்வுற்றனர் என்பதற்குப் பல சான்று கள் உள. நெறிதவருது தமது நித்திய கர்மா னுஷ்டானங்களைச் சரிவர ஆற்றிவந்த அந்தணர்கள் இக்கோவிலை மிகவுந் தூய்மையாகவும், பயபக்தி யுடனும் நிர்வகித்து வந்ததாலும் உரிய உற்சவம், பூசை, ஆராதனை ஆகியவற்றை முறையாக நடாத்தி வந்ததாலும் இக்கோவிலின் மகத்துவம் எங்கும் வியாபித்திருந்தது.

இவ் ஆதீனகர்த்தா சபாபதிக்குருக்களவர்கள் தெய்வீக இலக்ஷணங்கள் பொருந்திய உத்தமி யான பறுபத அம்பாளை விவாகஞ் செய்திருந்தார். அவ்வம்மையார் நேரந்தாழாது ஆலயவழிபாடு செய்தும் ஆலய சேவைகளே தன் பெருங்கடமை என நினைத்தும் விரதங்களை முறையாக அனுஷ்டித் தும் வருவாராயினர். சபாபதிக்குருக்கள் வயோதிப நிலையடைந்ததும் இக்கோவிலின் நிர்வாகப் பொறுப் பதிகாரங்களை குமாரசாமி ஐயர் சொக்கநாத ஐயர் அவர்களுக்கு 13-12-1825-ல் கையளித்திருந்தார்.

சபாபதிக்குருக்களவர்கள் நாற்பத்திமூன்று வருஷ காலமாக இக் கோவிலின் திருப்பணி வேலைகளையும், வேண்டிய திருவாபரணங்கள், வாகனங்கள், தட்டுமுட்டுத் தளபாடங்கள் யாவற்றையுஞ் சேகரித்ததோடு, நித்திய நைமித்தியங்களைச் சரிவர நடாத்துவிக்க அதற்கேற்ற தர்மசாதனங்களையும் ஆக்கி வைத்திருந்தார். இதனால் இவருக்குப்பின் ஆதீனகர்த்தாவாக வந்த சொக்கநாத ஐயர் தனது நிர்வாகத்தில் ஒருவித இடையூறுமின்றி மிகுந்த விசுவாசத்துடன் இக் கோவிலைச் சரியாக இருபத்தைந்து வருஷத்திற்கு எவருங் குறைகூறுவண்ணம் நடாத்திவந்தார். இவர் தனது தேக அசௌகர்யத்தை உணர்ந்தும், கோவில் முறைமையாக நடாத்தப்படல் வேண்டும் எனக் கருதியுந் தனது மூத்த குமாரனை சபாபதிக் குருக்கள் அவர்களுக்கு 27-12-1850ஆம் ஆண்டில் இக் கோவிலின் முழுப் பொறுப்பதிகாரங்களைக் கையளித்தார். இக் குருக்களோ தனது தந்தை, பாட்டன் ஆகியோரிலும் பார்க்கக் கூடிய சுறுசுறுப்புங் கல்விஞானமுங் கொண்டிருந்தார் ; வெகு ஜனங்களின் பாராட்டிற்குள்ளானார். கோவில் வீதிகளிலே சமய வளர்ச்சிக்கான பிரசங்கங்கள், சமய வகுப்புக்கள் ஆதியனவற்றையும் நடாததி வந்தார். ஒல்லாந்தர் ஆட்சியிலே மதம் மாற்றப்பட்ட சைவர்களைத் தகுந்த பிராயச்சித்தஞ் செய்து சிவதீட்சை கொடுத்து மீண்டும் சைவர்களாக்கினார்.இவர்காலத்திலேதிருப்பணிகள் யாவும் பூர்த்தியாயிருந்ததால்,சமய வளர்ச்சியிலுஞ் சைவர்களுக்குச் சமய அனுஷ்டானங்களைச் செய்யும் முறைபற்றிக் கற்பிப்பதிலும் அவதானஞ் செலுத்தினார்.

**கோவிலின் வளர்ச்சி**

இவர் இக்கோவிலை நிர்வகித்துவந்த இருபத்தைந்துவருஷ காலத்திலும் இக்கோவிலும் சுற்றுடலும், சைவ கலாச்சாரத்தோடு மிளிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சிறப்புடனும் மகத்துவத்தோடும் விளங்கிய இக் கோவிலுக்கு யாத்திரிகர்கள் பெருமளவில வரத்தொடங்கினர். இவர்களின் வசதிக்காகக் கோவிலின் வீதியோரமாகப் பல தர்ம மடங்களைக் கட்டுவிக்கவும் முனைந்தார். இவரும் உடல் நலம் குன்றியிருந்தமையால் இவ்வாலய வளர்ச்சியை முன்னிட்டுத் தனது ஏகபுத்திரியாகிய வேதநாயகி அம்மையாருக்கு 27 – 12 – 1875 ஆம் ஆண்டில் இக்கோவிலின் நிர்வாகப் பொறுப்பதிகாரங்களைக் கையளித்தார். வேதநாயகியம்மையாரோ சிறந்த சிவபக்தி பூண்டவர்; விரதங்கள் யாவையுந் தவறாது கடைப்பிடிப்பவர்; ஆலயசேவையை உயிரிலும் மேலானதாகக் கருதிச் செயலாற்றுபவர்; என்றென்றும் தன் தந்தையின் பக்கஞ் சார்ந்து வேண்டிய ஆலயசேவைகளைக் கவனிப்பதிற் சளைக்காதவர். 'விளையும் பயிரை முளையிற் தெரியு' மென்ற முதுமொழிக் கிணங்க வேதநாயகியம்மையும் இன்பு முகத்துடன் எதையுஞ் சகித்துக்கொள்ளுந் தன்மையையுடையவராக இருந்தார்; பக்தர்களின் வசதிக்கேற்ப வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதிற் பின்னிற்கமாட்டார். பெற்றோர்கள், அழகிலுங் குணத்திலும் ஆற்றலிலும் அறிவிலும் மேன்மைகொண்டுள்ள வேதநாயகி அம்மைக்கு ஏற்ற பருவகாலத்திலே 'சாமிக்குருக்கள்' எனும் நெறிதவறாது வாழ்ந்துவந்த அந்தணனை மணாளனாகு

மாலை சூட்டி வதுவை செய்துவைத்தனர். இவ் விருவரும் மிகுந்த பயபக்தியுடன் வாழ்ந்து வருங்காலை, இவர்கள் பிரமச்சர்யத்தோடு ஒத்த கடுமையான விரதங்களை அனுஷ்டித்து வருவதை யுணர்ந்த தந்தையார், சகல இலக்ஷணங்களையுங் கொண்ட திடகாத்திரமான ஆண்மகவொன்றை இவர்கள் பெற்றெடுக்க வேண்டுமென 'கார்த்திகை விரதம்' அநுஷ்டித்துவந்தார் என ஒரு கதை யுண்டு.

**இரத்தினக் குருக்கள்**

கார்த்திகை மாதம் சிங்கலக்கினமுஞ் சுவாதி நக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்திலே தமக்கோர் பேரன் பிறந்திருக்கிறன் என்றதனுலும், தமது விரதம் பலித்துவிட்டதென்றதனுலும், இக்கோவிலை முறையாகவும் திறமையாகவும் நிர்வகிக்க ஏற்றவ ரெனக் கோள்கள் மூலம் அறிந்ததனுலும், பேரன் சபாபதிக் குருக்கள் மிகுந்த உவகை கொண்டு பலருக்கு விருந்துகள், வழங்கியும் வஸ்திரம், பொன், மணி, தானியம் முதலியனவற்றை உபகரித்தும் பேரனைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தார். பேரன் சுப்பிரமணியசர்மாவோ பாட்டாவுடன் வீதி பவனிவருவதும் நிழல்போல எங்கும் சுழன்று வருவதுமாக இருந்தான். 27-12-1875ஆம் ஆண்டிலே, சபாபதிக் குருக்க ளவர்கள் தமது பேரன் 'சுப்பிரமணியசர்மா' பராயமடைந்ததும் அவரே இக் கோவிலின் நிர் வாகப் பொறுப்பதிகாரங்களை ஏற்று நடாத்திவர வேண்டுமென உறுதிமூலந் தீர்மானித்திருந்தார். சுப்பிரமணியசர்மா, தீட்சைகள் முறையாகப் பெற்று

சுப்பிரமணியக் குருக்களாகி ஈழநாட்டிலுள்ள அத்தனை பேரினதும நன்மதிப்பையும் விரைவிற் பெற்று விட்டார்.

பேரறிஞரால் 'இரத்தினக்குருக்கள்' எனச் சிறப்பாக அழைக்கப்பட்ட சாமிக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள் 6-9-1897 ஆம் நாளில் இக்கோவிலின் ஆதீனகர்த்தாவாகப் பொறுப்பேற்றிருந்தார். பொறுப்பேற்றவுடன் கோவிலின் அபிவிருத்தியிற் கண்ணுங் கருத்துமாகக் கடமையாற்ற ஆரம்பித்துவிட்டார். மாவிட்டபுரம் – கீரிமலே தெருவீதி அக்காலத்தில் ஓரடிப் பாதையாகவுஞ் சௌகரியமாகப் போக்கு வரத்துச் செய்யமுடியாத நிலேமையிலும் இருந்தது. சுவாமி தீர்த்தமாடப் போகும்போது பெருங் கஷ்டத்திற் குள்ளாவதை உணர்ந்த குருக்களவர்கள் அரசினரோடு கலந்துரையாடி, அப்பாதை பெரிதாக்கப் படவேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்து, ஈற்றில் அரசினர் மூலமாகவே இப்பாதையைக் கற்பதித்த விதியாகச் செப்பனிட வழிவகுத்தார். இறைவன் திருவருள் துணேகொண்டே எதுவும் நடைபெறும் எனும் கொள்கையோடு வாழ்ந்து வந்த குருக்களவர்கள் தேரோடும் மூன்றும் வீதியைச் செப்பனிட்டும், ஆலயக் குறைவேலேகளேப் பூர்த்தியாக்கியும், கோவிலுக்குச் சேர்ந்த நிலபுலன்களேத் தமது நேரடி மேற்பார்வையில் நிர்வகித்தும், தென்னிந்தியாவிற்கு அடிக்கடி சுற்றுப்பிரயாணங்கள் செய்து அங்குள்ள பல ஆலயங்களேப் பார்வையிட்டும், இன்னும் இக் கோவிலின் மகத்துவத்தையும், புனிதத் தன்மையையும்,

பொருள்களையும் எப்படி அவதானமாகப் பேண வேண்டுமோ அதன்படி மிகவும் அவதானமாகப் பேணியும் வந்தார். இவரது நிர்வாகத் திறமையை முன்னிட்டு ஊர்மக்களும் வேண்டிய ஆதரவுகளை நல்கினர். மூன்று விதிகளைக்கொண்டுள்ள இவ் வாலயத்திற்கு நாற்றிக்குகளிலும் இராஜ கோபுரங்கள் நிர்மாணிக்கவும் திட்டமிட்டிருந்தார். ஈடுபட்ட இரு இராஜகோபுர நிர்மாண வேலைகளில் ஒன்றுதான் பூர்த்தியடைந்தது. பூர்த்தியான மேற்கு வீதி இராஜகோபுரம் குருக்களவர்களது வல் லமையினுலேதான் கட்டுவிக்கப்பட்ட தெனத் தெரிகிறது.

**குருக்களவர்களின் பணி**

குருக்களது வீரம், சாதுர்யம், ஆற்றல், கவர்ச்சி கரமான தோற்றம் இவை யாவும் எல்லோரினதும் மனதைக் கவர்ந்தன. பொதுமக்களும், அக்கால அரசாங்க அதிபதிகளான வெள்ளையர்களும் குருக் கள்மேல் அதிக விசுவாசமும நன்மதிப்புங் கொண் டிருந்தனர். இதனுலே கோவிற்றிருப்பணி வேலைகள் கஷ்டமின்றி நிறைவேற வாய்ப்பிருந்தது. வெள்ளி மயில்வாகனம், வெள்ளி துவஜஸ்தம்பம், வெள்ளி அங்கிகள், வெள்ளி ஷோடசோபசாரங்கள், குடங்கள், தங்க ஆபரணங்கள் ஆகியவற்றையும், இன்னும் விதிகளிற் கூறப்பட்ட பிரகாரம் அவ்வவ் உற்சவாதிகளுக்குரிய வாகனங்கள் ஆகியவற்றை யும் திறமையான கலைஞர்கள் மூலம் ஆக்கி வைத்தார். கோவில் வேலைகளைச் சரிவர நடாத்தப் பிரிவு பிரிவாக வேலைகளைப் பகிர்ந்து ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற ஒருவரைப் பொறுப்பாக அமர்த்

தினார். தினசரி பூசைக்கு மேளவாத்தியம் இசைக்க ஒழுங்குபடுத்தியதோடு தமது முன்னோர்கள் காலத்தில் எப்படியெல்லாம் பரம்பரை பரம்பரை யாக இசையாளர்கள் இக்கோவிலிற் சேவைசெய் தார்களோ அவ்வண்ணஞ் செய்வித்து வரவேண்டு மெனக் கருதி அதற்கான ஒழுங்குத்திட்டங்களையுஞ் செய்து வைத்தார். இதேபோலக் கோவிலுக்கு வேண்டிய நேரங்களில் வெள்ளைகட்டி அலங்கரிப் பதற்கும், பூமாலை கட்டுவதற்கும், இன்னும் வேறு பல வேலைகளுக்குந் தகுந்தவர்களை நியமித்து அவ் வேலைகளைக் கஷ்டமின்றி நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்திருந்தார். இவ் ஒழுங்குகள் பல இன்றும் நடைமுறையில் இருக் கின்றன. குருக்கள்காலத்திலே ஆயிரக்கணக்கா னோர் தத்தம் நோய்கள் நீங்கப்பெற்றனர்; காவடி யெடுத்தும், சங்காபிஷேகங்கள் செய்தும் தத்தம் நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர்.

**தங்க முடி**

**எ**ல்லாம் வல்ல முருகப் பெருமானுக்குத் தங்க முடியிடவேண்டுமெனக் குருக்கள் தீர்மானித்தார். இவரது எண்ணம் வெகுசீக்கிரத்தில் நிறைவுற்றது. குருக்களவர்களது உற்ற நண்பர்களு ளொருவ ராகும் குரும்பசிட்டி வாசியான ந. சின்னத் தம்பி (சட்டம்பியார்) அவர்கள் இத்தங்க முடியை நிர்மாணிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய் தனர். எவ்வளவு விரைவாகத் தங்கமுடி அமைக்கப் பட்டதோ அவ்வளவு விரைவாக அது மாயமாய் மறைந்துவிட்டது. முடியைக் காணாது பெரும்

துயரத்திலாழ்ந்த குருக்களவர்கள் நீர் அருந் தாமலும் அன்ன ஆகாரமின்றியும் பெரு நோன் பிருந்தார். முடி மாயமாகப் போன விதமும் அது இருக்குமிடமும் குருக்களவர்களுக்குக் கன விலே தென்பட்டது. முடியைக் களவாடிய பிரம் மாக்கள் அதைப் பாதுகாப்பிற்காகப் புதைதத இடத்தில் வேறு யாரோ அதன் ஒரு பகுதியைக் களவாடிவிட்டனராம். கூடச் சேர்ந்தவர்தான் கவர்ந்துவிட்டார் என்றும் ஒருகதையுண்டு. இன்றும் இச் சோகக்கதை ஊரின் பல இடங்களிற் பேசப்படு கிறது. முதன்முதலாக இங்கு நடைபெற்ற திருட்டுச் சம்பவம் இதுவேயாகும். இத் திருட்டுச் சம்பவம் மூலம் குருக்களவர்களுக்கு இனப்பகை மலர ஆரம் பித்துவிட்டது. இவர், தமது சகோதரராயினுஞ்சரி அல்லது மகனுயினுஞ்சரி அல்லது உற்ற நண்பராயி னுஞ் சரி யாராயினும் ஆலயவிஷயத்திற் குற்றங் குறை செய்யின் அவர்களை மிகவுங் கடுமை யாகத் தண்டிப்பார்; இதனுலே இனத்தவர்களின் பகைமைக்கும் ஆளாகிவிட்டார்.

**சமய வளர்ச்சி**

குருக்களவர்கள் சைவசமயத்தை உலகெங் கும் பரப்பவேண்டுமென்ற விருப்பத்தை மனதிற் கொண்டிருந்தார். இதற்காக மக்கள் விரும்பி யேற்கக்கூடியதாகச் சமயச் சொற்பொழிவுகள், சங்கீத கதாப்பிரசங்கங்கள், கிராமிய நடனங்கள், விழாக்கள் ஆகியனவற்றை ஏற்பாடு செய்திருந் தார். கதாப்பிரசங்கஞ் செய்வோருக்குப் பரிசில்கள் வழங்கியும், நிதியுதவி புரிந்துங் கௌரவித்து அவர்களை அவ்வழியில் அதிக அக்கறை செலுத்த

உற்சாகப்படுத்தினர். கரகம், காவடியாட்டம் போன்றவற்றை முறையாக நடாத்த இந்தியாவி லிருந்தே கலைஞர்களை வரவழைத்து அக்கலைகளை முறையாகப் பயிற்றுவித்தாரென இன்றுள்ள பலர் கூறுகிறார்கள். கோவில்களிலும் மடங்களிலும் கந்த புராணம், திருச்செந்தூர்ப் புராணம் ஆதியாம் புராணங்களை ஊர்மக்கள் படிக்கவுங் கேட்டறிய வும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்திருந்தார். குருக்க ளவர்கள் திருச்செந்தூர்ப் புராணத்திற்கு உரை சொல்லும்போது அதில் ஒரு தனிமகத்துவம் இருக்குமென்று இன்றும் பலர் கூறுகிறார்கள்.

## இசை வளர்ச்சி

இதேபோல் இசை அபிவிருத்திக்கும் வேண்டி யதைச் செய்திருந்தார். அக்காலத்தில் இன்றுள்ள சங்கீதபூஷணப் பட்டதாரிகளைப்போல் வல்லு நர்கள் இருக்கவில்லை. ஆனல் நாதஸ்வர வித்து வான்கள்தான் இசையை மக்கள் இரஸிக்கக் கூடியதாக வளர்த்தனர். ஆலயத்திலே சிறந்த நாதஸ்வர வித்துவான்களைச் சேவைக்கு அமர்த்தி ஞர். இசையாளர்களை வருடப்பிறப்பன்றும் தீபாவளி போன்ற பெருநாட்களின்போதும், தமது இல்லத்திற்கு அழைத்து அவர்களுக்கு வஸ்திரம், பொன், மணி ஆதியாம் கொடைகள் வழங்கிக் கௌரவித்தார். சென்ற இரண்டாம் உலக யுத்த காலம்வரை இவ் வழக்கம் நீடித்து நிகழ்ந்து வந் ததை யான் அறிவேன். ஆலயத்திலே மிகவும் புனிதமானதும் உன்னதமானதுமான நாதஸ்வர இசையைத் தினமுங் கேட்கக்கூடியதாக இருந்தது.

சிறந்த நாதஸ்வர வித்துவான்களுக்குத் 'தங்கநாயனம்' (நாதசுரம்) இந்தியாவிலிருந்து வர வழைப்பித்து இக் கோவிலிலே வைத்து அதனை அன்பளிப்பாகக் கொடுத்துக் கௌரவித்திருந்தார். இதனால் ஈழநாட்டு நாதஸ்வரக் கலைஞர்கள் மத்தியிலே ஒரு புத்துணர்ச்சி யோங்கியது ; ஒவ்வொருவரும் தாம்தாம் பெரிய கலைஞனாக வரவேண்டுமென எண்ணினர். ஈழத்து நாதஸ்வரக் கலைஞர்களைக் கௌரவிக்கும் நோக்கமாக இக் கோவிலிலே நடைபெறும் விழாக்களிற் பிறநாட்டுக் கலைஞர்கள் பங்குபற்றுதபடி ஆணித்தரமான சட்டத்தை யேற்படுத்திவிட்டார். இச்சட்டம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது. வேதகோஷங்கள், திருமுறைகளின் ஓசை, நாதஸ்வர இசை இவை யாவும் ஒருங்கே சேர்ந்து எங்கும் பக்திப் பிரவாகமாகக் காணப்பட்டன. இதனால் பக்தர்கள் குழாம் அதிகரித்ததோடு அவர்கள் யாவரும் பக்தி மார்க்கத்தில் நின்று பூரிப்படைந்தனர்.

**சுவாமியை அலங்கரிக்குங் கலை**

சுவாமியைப் பூமாலைகளால் அலங்கரிக்கும் கலையைச் 'சாத்துப்படி' எனக் கூறுவர். பெருவாரியான பூமாலைகளைக்கொண்டு விதம்விதமாகச் சாத்துப்படி செய்வித்த பெருமை குருக்களவர்களையே சாரும். பூஞ்சப்பரம், பூஞ்சாத்துப்படி செய்வதனால் பல மணித்தியாலங்கள் கழிகிறது என்பதை யுணர்ந்த குருக்களவர்கள் சாத்துப்படி அலங்கரிக்கும்போதும் பூஞ்சப்பரம் கட்டும்போதும் பக்தர்கள்

தமாஷில் ஈடுபடாது ஏதேனும் ஒரு சமயசம்பந்த மான நிகழ்ச்சியில் ஈடுபட வழி வகுக்கவேண்டு மென ஆராய்ந்தார்.

புராணங்கள் கூறும் கதைகளை மக்களுக்கு நடிப்புமூலம் காட்டவேண்டு மென்ற கொள்கை யைக் கொண்டிருந்தார். வெள்ளையர் காலத்தில் அதிகமான மக்கள் பல வசதிக்குறைவுகளாற் கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. புராண இதி காசங்களை நாட்டிய-நாடகமூலம் மக்களுக்குத் தெரி யப்படுத்தும் நோக்கமாகச் ‘சின்னமேளம்’ என இக்காலத்திற் கூறப்படும் நாட்டிய-நாடகத்தைக் கோவிலில் ஆரம்பித்துவைத்தார். பரதநாட்டியத் தோடு அமைவுடையதும் பண்பும் புனிதமும் வாய்ந்ததுமான அந் நாட்டிய-நாடகத்தை ஒழுங்கு செய்திருந்தார். அக்காலத்தில் ‘சதுர்’க் கச்சேரி என்றும் வழங்கப்பட்டுவந்தது. இந் நிகழ்ச்சி பெரிதும் வரவேற்கப்பட்டது; பிரமாண்டமான கூட்டங் கூடிவிடும். சொற்பகாலஞ் செல்ல இந்நாட் டிய-நாடகம் கீழ்த்தரமான வகையிற் செல்லுவதை அவதானித்த குருக்களவர்கள் அந் நிகழ்ச்சியை நீக்கிவிட்டார். பெருங்கூட்டத்தை அமைதியாக்கும் பொருட்டுப் பாமரமக்களை அடித்தும் துன்புறுத் தியும் இச் சாட்டோடு தொந்தரவு கொடுத்தும் ஆலயத்தின் புனிதத்தன்மையைக் கெடுத்தும் இன்னும் தாங்கொணுத் துயரங்களைக் கொடுக்கும் சம்பவங்கள் விளைய அது ஏதுவாகிறது என்பதை உணர்ந்தே குருக்களவர்கள் இந் நிகழ்ச்சியை நிறுத்தினர்.

## சங்கீத கதாப்பிரசங்கம்

இதற்குப் பதிலாகச் சங்கீதகதாப்பிரசங்கங்கள், சங்கீதக்கச்சேரிகள் ஆதியனவற்றை ஒழுங்குசெய் திருந்தார். நாட்டிய–நாடக சண்டியர்கள், அதன் மூலம் பிரபலமடைந்தவர்கள், இந் நாட்டிய நிகழ்ச் சியை நிறுத்தியதையிட்டுக் கொதித்தெழுந்தனர்; பல தொல்லைகளைக் கொடுத்தனர்; கோவிலிற் கூட்டஞ் சேராதபடி சூழ்ச்சிகள் செய்தனர். இவை யொன்றுக்கும் குருக்கள் சிறிதேனுந் தயங்கவில்லை. ஈற்றில் ஒருசிலர் குருக்களுக்கு விரோதியாகி எப்படி யெல்லாம் குருக்களுக்கும் கோவிலுக்கும் இடை யூறு செய்யமுடியுமோ அவ்வவ்வழிகளில் இறங் கினர். இவ் விரோதிகளுடன் தங்கமுடிச் சதிகாரர் களும் இணைந்தனர்.

## நுண்கலை வளர்ச்சி

நுண்கலை வளர்ச்சியில் ஈடுபாடுகொண்ட குருக்களவர்கள் சப்பரம், சாத்துப்படி, பந்தல் அலங்காரம் போன்றவற்றிற் கூடியளவு அக்கறை கொண்டு அதிலும் ஓர் அபிவிருத்தியைக் கண்டிருந் தார். மாவிட்டபுரத்திலேதான் முதன் முதலாகப் பூஞ்சப்பரம் கட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது. இவ்வுண்மையை இன்று கோவில்வீதியின் வடக்கே வாசஞ்செய்பவரும் குருக்களவர்களுக்கு அக்காலத் தில் ஒரு மந்திரி போன்று இருந்தவருமான சின்னத் தம்பி கந்தையா அவர்கள் ஒப்புக்கொள்கிருர். இவருக்கு இன்று வயது 84 ஆகிறது. இவரின் தகப்பனும் இவருமாகச் சேர்ந்தே இப்பூஞ்சப்பரத்

தைக் கட்ட ஏதுவாயிருந்தனர் எனக் கூறுகிருர். இன்றும் இக் கோவில் விழாக்களில் 'பூஞ்சப் பரம்' கட்டுவது இவரும் இவரது மைந்தனுன க. பொன்னுச்சாமியுமாவர். கார்த்திகைத் திருவிழா வன்றும் பத்தொன்பதாந் திருவிழாவன்றும் கட்டப் படும் பூஞ்சப்பரத்தைப் பார்க்க இன்றும் பல் லாயிரக் கணக்கானவர்கள் கூடிநிற்பர். பூஞ்சாத் துப்படியும் பூஞ்சப்பரமும் கண்கொள்ளாக் காட் சியாக இருக்கும். இங்ஙனமாகத் தெய்வபக்தியை மக்களிடம் ஊட்டுவதற்காகப் பல வழிகளாலும் குருக்களவர்கள் பாடுபட்டார்.

**கருங்கற்றிருப்பணி**

சிற்பத்திறனே டமைந்த கோவிலாக இக் கோவில் காட்சிதர வேண்டுமென எண்ணிச் சிற்பத்திறன் மிகுந்த கருங்கற்கோவிலைச் சமைக்க உடனேயே முற்பட்டார். இந்தியாவிலிருந்து திறமைசாலியான **அமராவதி** என்ற சிற்பாசாரி யின் தலைமையிற் கைதேர்ந்த சிற்பிகளடங்கிய ஒரு கோஷ்டியை வரவழைத்து வேலைகளை ஆரம் பித்தார். 1927ஆம் ஆண்டு ஆனிமாதம் கர்ப்பக் கிருஹம், அர்த்தமண்டபம் ஆகியவற்றைக் கருங் கற் சிற்பவேலையாய்க் கட்டி முடிப்பித்துக் கும்பா பிஷேகத்தையுந் தாமாகவே நடாத்திவைத்தார். ஒரே வருடத்தில் இப்படியான மகோந்நதமான காரியத்தைச் செய்துமுடித்த இவரது திறமை, சாதுர்யம், துணிவு ஆதியனவற்றை ஊர்மக்கள் வியந்து பேசினர். 'இது முருகன் திருவருள்தான்'

என்றுகூடப் போற்றினர். நாடெங்கும் இதே கதைதான். ஆனால் தங்கமுடித் திருட்டுச் சதிகாரர் குழாம் குருக்களவர்களுக்கு விரோதமாகவே இருந்துவந்தனர்.

நுண்கலைகள் யாவும் பல்லவர் காலத்தைப் போற் புனிதமாகவும், பரிசுத்தமாகவும் வளர்க்கப் படவேண்டுமெனக் கருதியே கோவிலை மையமாக வைத்து எதையும் நடாத்தினர். உற்சவ காலங்களில் நிகழும் பூசை, ஆராதனைகள் அருளைத் தரும்; பலவித இசைகள் ஒருபால் முழங்கும்; சப்பரம், சாத்துப்படி இவையாவுங் கண்ணைப் பறிக்கும்; கதாப்பிரசங்கங்கள் மனத்தை ஈர்க்கும்; வாண வேடிக்கை உள்ளத்தைப் பரவச மடையச் செய்யும். ஈற்றில் இப்படியிப்படியே ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனதை இறைவன்பால் லயப்படுத்துஞ் சக்தி வாய்ந்தனவாக அமைந்துவிடும். உற்சவங்கள் யாவும் மாலை ஆரம்பித்து மறுநாட் காலை வரை நீடிக்கும். அக்காலத்து நாட்டின் நிலைமையை அவதானிக்கும்போது இப்படியான உற்சவங்கள் அவசியந் தேவையென்பது புலனாகிறது. இதனால், கோவிலுஞ் சிறப்புடன் பொலிந்தது. ஊர்மக்களும் தமக்குப் பிடித்தமான கலை நிகழ்ச்சிகளிற் பங்குபற்றத் திரண்டுவிடுவார்கள். இவ்வேளையில் சுவாமியைத் தரிசித்து வழிபாடு செய்யவும், சமயப் பிரசங்கங்களைக் கேட்கவும் கூடிய வாய்ப்பை மக்கள் பெற்றிருந்தனர். பக்திமார்க்கம் பரவ இடமளித்தது.

**மின்சார விளக்கு அமைத்தல்**

இரவு நேரங்களிலே தினசரிகூடும் பக்தர்களின் வசதிகளுக்காகக் கோயில் உட்புற வீதிகளில் வெளிச்சமிட எண்ணி மின்சாரமுலம் ஒளியைப் பரப்ப முற்பட்டார். 1934ஆம் ஆண்டளவில் முருகப்பெருமானது சரித்திரத்தை உணர்த்தும் வகையில், 'வள்ளிதிருமணம்' எனும் நாடகமொன்றினைத் தாமாகவே தயாரித்து ஊரிலுள்ள கலைஞர்களைக் கொண்டு உயரிய முறையில் நடிப்பித்துக் கோயிலின் தெற்கு வீதியில், பல்லாயிரக் கணக்கானோர் முன்னிலையில் அரங்கேற்றி வைத்தார். நாடகமோ மிகவும் உயர்தரமாயிருந்தது; உன்னதமான தயாரிப்பு. இதனால், தெற்குவீதி முழுவதும் ஒரே ஜனக்கூட்டமாகக் காட்சியளித்தது. இந்நாடக மூலம் சேகரித்த பணத்தைக் கொண்டு கோவிலுக்கு மின்சார விளக்குகள் பூட்டி எங்கும் ஒளிமயமாக்கிவிட்டார். நினைத்ததும் உடன் முடித்துவிடும் சக்தியைக்கொண்டவர் குருக்களவர்கள். முதன் முதலாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கோவில்களில் இங்குதான் மின்சாரம் அமைக்கப்பட்டது. எங்கும் ஒளி மயமாக இருப்பதைப் பார்த்ததும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பெரும் பூரிப்படைந்தார். ஊர் மக்களும் அவருடன் சேர்ந்து களிப்படைந்தனர்.

**குருக்களின் அமைச்சர்போன்ற மூவர்**

குருக்களவர்களுக்குப் பக்கத் துணையாகப் பிரதான அமைச்சர்கள் போன்று மூவர் இருந்தார்கள்: கொல்லங்கலட்டி வாசியான விசுவநாத முதலியாரும், பன்னாலை வாசியான விச்சுப்

பரிகாரியார் எனும் வைத்தியர் விசுவநாதரும், விழிசிட்டி வாசியான முகமாலை விதானையார் எனும் க. புண்ணியமூர்த்தியுமாவார்கள். சிறந்த கடவுள் பக்தியும், குரு விஸ்வாசமுங் கொண்ட இவர்கள் குருக்களுக்கு எவ்விஷயத்திலும் உறுதுணையாக விளங்கினர். குருக்களவர்கள் 1943ஆம் ஆண்டு சிவபதமடைந்தபோது இவர்கள் பட்ட துயரும், விட்ட கண்ணீரும் சொல்லாற் கூற முடியாதவை. அன்று தொடக்கம இவர்கள் ஊரின் பல விசேஷங் களிற் பங்குபற்றுமலும் குருக்களவர்களையே நினைந்து நினைந்து வாடியிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குருக்களவர்களின் கதை யைப் பேச எடுத்தால் இவர்கள் துயரம் மேற் கொண்டு விம்மி விம்மி அழுவதை யான் நேரிற் பார்த்திருக்கிறேன். இவர்கள் இக் கோவிலின் வளர்ச்சிக்குப் பாடுபட்டதை ஊர் மக்கள் நன்கு அறிவர். குருக்களவர்களின் பூரண நம்பிக்கைக்கு இம் மூவரும் பாத்திரராக இருந்தனர்.

இக் குருக்களவர்கள் 42 வருஷங்களில் இக் கோவிலின் வளர்ச்சிக்காக எவற்றையெல்லாம் செய்யவேண்டுமோ அவற்றைத் திறமையாகவே நடத்துவித்து வைத்தார். "ஆலயமானது பிரஜை களின் இஷ்டங்களையெல்லாம் பூர்த்திசெய்வதற் காகவே தோற்றுவிக்கப்பட்டது":

'தேனேதம் காரிதம் துங்கம்,
தூர்ஜடேர் மந்திரக் கிருஹம், பிரஜாஞம்
இஷ்டசித்யர்த்தம் சாங்கரீ பூதிமிச்சிதா"

என்று பல்லவகாலத்துக் கல்வெட்டிற் கூறப்பட்ட பிரகாரம் "நுண்கலைகள் யாவும் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்படவேண்டு மாதலின் அக்கலை களின் பிறப்பு, தோற்றம் ஒரு தெய்வீகம் பொருந் தியதாக அமைய வேண்டும்" என்னும் நெறியைப் பின்பற்றியும் "பிரஜைகள் விரும்பிய வழியிற் கடவுளை யடையக் கோவில்களை மையமாகக் கொண்டு யாவும் நடாத்தப்பட வேண்டும்" என ஆகமங்களிற் கூறப்பட்டவற்றை மனதிற் கொண்டும் குருக்களவர்கள் அதற்கேற்றவாறு செயலாற்றினர்.

### இனப்பகையுங் கஷ்டங்களும்

1936ஆம் ஆண்டுவரை பல திருப்பணிகளை முடித்தும், தம் முன்னோர் நாடாத்திவந்த பிர காரம் கோவிலை நிர்வகித்தும் இயல், இசை, நாடகம், சிற்பம், ஓவியம் ஆகிய நுண்கலைகளில் ஆர்வத்தை யுண்டுபடுத்தி, காலத்திற்கேற்றவாறு திட்டங் களை யமைத்தும், மக்களை அவ்வழியிற் பழக்கியும், இவ்வாருகப் பெருநன்மைகளையும் ஆற்றி வந்த குருக்களவர்களுக்கு இனப்பகைமூலம் கஷ்டங்கள் தோன்ற ஆரம்பித்தன. வெள்ளையர்களின் அர சாட்சியில் மதிப்போடு அவர்களது போற்றுதல் களுக்குக் குருக்கள் ஆளாகியிருந்தார். வெள்ளைக் கார அரசாங்க அதிபர்கள் எதைஎதைச் செய்கிருர் களோ அதனை இவருஞ்செய்வார். சோடிக் குதிரை பூட்டிய குதிரைவண்டியில் தேசாதிபதி வருவதாக இருப்பின் குருக்களவர்களும் அதே பிரகாரம் சோடிக்குதிரை பூட்டிய இரதத்தில் எழுந்தருளு

வார். இப்படியே அரசினராலும் பொதுமக்களாலும் போற்றப்பட்டு ஓர் இராசரீக வாழ்க்கை வாழ்ந்து வந்த குருக்களவர்களுக்குப் பொருமை மிகுந்த இனப்பகை சூழ்ந்தது. கோவிலின் பூசைப் பங்கிற்கு வழக்குகள் ஆரம்பமாயின. குருக்களுக்கு மாருன தீய குணங்களைக் கொண்ட விரோதிகள் ஒருங்கு திரண்டனர். உடல்நலங் குன்றியது. இக் காலத்திலேயே மேற்கு இராஜகோபுரத்தைக் கட்டுவித்துவிட்டார். குருக்களவர்களது கடைசி வேலை இதுவாகவே அமைந்தது.

வழக்குகள் ஒருபக்கம், தீமைகளைச் சதா செய்துவரும் பகைவர்களது தொல்லைகள் இன்னொருபக்கம், ஆலயப்பொருள்களைத் திருடும திருடர்களின் அநியாயங்கள் வேறுபக்கம்; இப்படி இப்படிப் பல தொல்லைகள் தோன்றவே, கோவிலின் வளர்ச்சியுங் குன்ற ஆரம்பித்தது. குருக்களின் இரண்டாம் குமாரரான 'சோமசுந்தரம்' எனும் சோமுச்சாமியார் இளம் வயதிலேயே தமதாசார நெறியினின்று விலகி பூணூலையும் இழந்து, காவியுடுத்துப் பரதேசியாகினுர். இவர் வெகுகாலம் இந்தியாவிலே தங்கிவிட்டுப் பின் இங்குவந்து தமது தந்தையாரோடு இக் கோவிலில் உரிமை வேண்டுமென எதிர்த்தார். எவ்வளவோ உபதேசித்துங் கேட்டாரில்லை. ஈற்றில் இக்கோவில் பொதுவுரிமைச் சொத்தெனக் குருக்களவர்களின் விரோதிகளுடன் இவருஞ் சேர்ந்து வழக்காடினுர். ஒன்றுக்குமே அஞ்சாத குருக்களவர்களைச் சுற்றி வழக்குகளின் கஷ்டங்கள் ஒரு

புறமும் உட்பகை இன்னொருபுறமுங் கோவிற் பொருள்களைத் திருடும் திருடர்களின் தொல்லைகள் வேறொருபுறமுந் தோன்றி நெருக்கின. இந்நிலையில் இரண்டாம் மகாயுத்தம் காரணமாக எழுந்துள்ள பஞ்சமுந் தோன்றிற்று. அத்தோடு வயோதிப மும், உடல்நலக் கேடும் ஒன்றுசேர்ந்தன.

**வரப்பேறு**

பெருந்தொகையான மக்கள் குருக்களவர்களின் ஆசியோடு இக்கோவிலில் ஆற்றிய தொண்டினால் இஷ்டசித்திகளைப் பெற்றனர். இலங்கை வானொலியிற் கடமையாற்றும் சண்முகநாதன் (சானா) அவர்களது பெற்றோர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். பிள்ளைவரம் வேண்டிக் குருக்களை அணுகியபோது குருக்களவர்கள் ஆசீர்வதித்துத் திருநீறு வழங்கிச் சிவனொளிபாத மலைக்குப் போய்வருமாறு பணித்தார். அங்ஙனம் யாத்திரை போய்வந்ததும் மகவொன்றைப் பெற்றெடுத்தனர். இவரைக் கந்தசுவாமிகோவிற் சுவாமியாருக்கே கையளித்தனர். இம்மகவுக்கு, சண்முகநாதன் எனக் குருக்களே நாமகரணஞ் சூட்டினார். இதைப்போலவே சைவமரபு பிறழாது வாழ்ந்துவரும் விழிசிட்டி மக்களுள் ஒருவரான பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அவர்களும் நெடுநாட்களாக மக்கட்பேறு இல்லாது வருந்துகையில் குருக்களவர்களது ஆசியின்படி பன்னிருவருஷம் ஒவ்வொரு கார்த்திகை விரதத்தையும் அனுட்டித்து வந்தார். இவருக்கு அழகான மேனியுடன் ஒரு புத்திரன் கிடைத்தான். இவருக்குக் 'கந்தசாமி'

எனப் பெயரிடப்பட்டது. இவரும் சமயானுஷ்டானங்களைக் கிரமமாக ஆற்றிவருகிருர். இப்படியிப்படியே பலர் இஷ்டசித்திகளைப் பற்பலவழியிற் பெற்றிருக்கின்றனர்.

**குருக்களின் மறைவு**

துரியோதனன் அவையிலே நடைபெற்ற சூதாட்டத்திற் பஞ்சபாண்டவர்கள் எப்படியெல்லாம் தம் உடைமைகளைச் சூழ்ச்சிக்காரரின் முன் இழந்தனரோ, அதேபோலத் தமது பொருள், பண்டம், உடைமை யாவற்றையும் இழந்து 1943 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம், 'முருகா சரணம்' என்று எந்நேரமும உச்சாடனம் பண்ணிக்கொண்டிருக்கையில், தேவார திருவாசகங்கள் ஒருபால் முழங்க, அர்த்தஜாமப் பூசை முடிந்து முருகப்பெருமானது விபூதி தீர்த்தம் சந்தனப் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்டதும் குருக்களவர்கள் இறைவனடி சேர்ந்தார். இவ்வாலயத்தை நிர்வகித்தவர்களுள் மிகக்கூடியகாலம் (46 வருஷங்கள்) ஆலயபரிபாலனஞ் செய்த பெருமை சாமிக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்களுக்குத்தான் உண்டு. இவர் சமய வளர்ச்சியில் ஈழநாடும் பாரதநாடும் பெருமிதங் கொள்ளத்தக்க அரும் பெருஞ் சேவைகளைச் செய்ததை இன்றும் மக்கள் போற்றி நிற்கின்றனர்.

**ப்ரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்கள்**

**28-11-1943** ஆம நாளிற் குருக்களவர்களின் மூத்த குமாரரான துரைசாமிக் குருக்கள் அவர்கள் மரணசாதன உறுதியின் பிரகாரம் ஆலய நிர்வாக உரிமைகளைப் பெற்றிருந்தார். அவர் இவ்

வாலயத்தைப் பொறுப்பேற்றிருந்த சமயம் பயங்கர மான சூழ்நிலை நிலவியது. தந்தையின் வழக்குகள், தியவர்களது திராத பகைமையின் விளைவுகள், தந்தையாரது கடன் தொல்லைகள், கோவிலில் உடனடியாகப் பூர்த்தியாக்க வேண்டிய திருப்பணி வேலைகள், தேர்களின் முறிவு, இரண்டாவது மகாயுத்தம் காரணமாக எழுந்துள்ள பெரும் பஞ்சம், வறுமை, இவை யாவும் ஒன்று சேர்ந்து இவரைக் கலக்கின. எனினும் அஞ்சா நெஞ்சுடன் அவர் தமது பணிகளை யாற்றினர். வழக்குகள் நடாத்தினேர் விட்டபாடில்லை. வழக்குகள் யாவும் நேர்மையற்றனவாகவும் அடாத்தானவையாகவுங் காணப்பட்டன. இதனைக் கோவிலின் சேவையி லுள்ள இசையாளர்கள், சிப்பந்திகள், உபயகாரர் கள் யாவரும் அறிந்திருந்தனர். கோவிற் பணி விடைகாரர்கள் தங்கள் ஊதியத்தைக் கொடுத்துக் குருக்களவர்களுக்கு உதவி செய்ய முன் வந்தனர். இப்படியிப்படியே இக்கோவிலோடு சம்பந்தப்பட்ட அனைவரும் குருக்களுக்கு உதவிபுரிய முன்வந்தனர்.

வழக்குகள் வெற்றியும் தோல்வியுமாக மாறி மாறி நிகழ்ந்தன. இதனால், கோவில் சீரழிய ஆரம் பித்ததோடு பக்தி மார்க்கமுங் குன்ற ஆரம்பித் தது. குருக்களவர்கள் இக்கோவிலோடு கிராமமும் நாடும் அழியப்போகின்றனவே என உணர்ந்து இக்கோவிலைப் பொதுத் தர்மச் சொத்தெனப் பிரகடனப்படுத்திவிட்டுப் பரிபாலன உரிமைக்கு வாதாடினர். அதில் வெற்றியுங் கண்டு பரம்பரை ஆதீன உரிமையை நீதிமன்ற மூலம் பெற்றுவிட் டார். தலைமுறை தலைமுறையாக வேதசிவாகமங்

களின்படி முறையாக அந்தணர் குலத்தாரால் நிர்வகிக்கப்பட்டுவரும் இவ்வாலயம், ஒருசிலரின் விஷமத்தனத்தாற் கைமாறிப் பாழாய்ப் போகப் போகின்றதே என ஏக்கங்கொண்ட மக்கள் இவ் வழக்கின் முடிவைக்கண்டு சந்தோஷங் கொண்ட னர்; திருப்பணிகளுக்கு ஆதரவளித்தனர். தேர் விழாப் பொறுப்பாளர்கள் தேர்களைப் புதுக்கியுந் திருத்தியும் அமைப்பித்தனர். தேர் வேலைகளைக் காரைக்குடி சோமசுந்தர ஸ்தபதியின் குழுவினர் இங்குவந்து இயற்றினர். மேற்கு இராஜகோபுரம் ஸ்தூபி வைத்துக் கும்பாபிஷேகஞ் செய்து நிறை வேற்றப்பட்டது. குறைவேலையோடு காணப்பட்ட வெள்ளித் துவஜஸ்தம்பம் மீண்டும் மிகுந்த அழ குடன் இளவாலை, ஸ்ரீமான் தம்பு கனகரத்தினம் கதிர்காமநாதன் அவர்களின் உபயமாகப் புதிதாக் கிப் பூர்த்தியாக்கப்பட்டது. வாகனங்கள் பல செப்ப னிடப்படடும் புதிதாகச் செய்யப்பட்டுமுள்ளன. மண்டபங்கள் பல திருத்தியமைக்கப்பட்டன.

இந்தியச் சிற்பக் கலைஞர்களை ஆதீனகர்த்தா அவர்கள் காரைக்குடி செல்லக்கண்ணு ஸ்தபதிமூலம் தேர்ந்தெடுத்தார்கள்.

### திருப்பணி வேலைகளின் நிறைவு

ஈற்றில் தமது தந்தையார் ஆரம்பித்துவைத்த கருங்கற் திருப்பணி வேலைகளைப் பூர்த்திசெய்து வைக்க எண்ணி, அத்திருப்பணி வேலைகளை 1958ல் ஆரம்பித்துவைத்தார். மகாமண்டபம், நிருத்த மண்டபம் ஆதியன விரைவிற் பூர்த்தியாகும் நிலை யில் இருக்கின்றன. மகாமண்டபத் திருப்பணியைச்

சைவநெறிவளர்க்கும் வண்ணைக் கொடைவள்ளல் ஸ்ரீமான் சிருப்பர் சு. கனகசபை அவர்கள் நடாத்தி வருகின்றார். நிருத்த மண்டபத் திருப்பணியை மாவிட்டபுரம்—பளை வாசரும் சிவபக்தருமான ஸ்ரீமான் ஆ. திருஞானசம்பந்தர் அவர்கள் செய்து வருகிறார். இம் மண்டபங்கள் மிகுந்த கவர்ச்சிகரமாக அமைகின்றன. இவ்வேலைகளைக் காரைக்குடி வாசியான பெரியசாமி ஸ்தபதியின் மேற்பார்வையில் அவரது சிற்பக் கலைஞர் கோஷ்டியினர் இயற்றிவருகின்றனர். இப்படியாகக் கோவிலின் திருப்பணிகள் முறையாகவுஞ் சீராகவும் நடைபெற்று வருகின்றன.

சைவசமயிகள தத்தம் நேர்த்திக்கடன்களைத் தீர்க்கும் வண்ணம் பாரத நாட்டிற்கு யாத்திரை செய்து வருவது வழக்கம். சிறப்பாகச் சிதம்பரம், திருச்செந்தூர், பழனி ஆதியாம் இடங்களுக்கே யாத்திரை செல்வர். பலவித காரணங்களாலும் மக்கள் இப்புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்ய இயலாது தவித்தார்கள். இதனை முன்வைத்து, சிதம்பரத்திலிருந்து தீட்சிதர்மூலம உருவாக்கப்பட்ட சிதமபரேஸ்வரீ சமேத சிதம்பரேஸ்வரர் உருவங்களை வரவழைத்து இங்கு ஸ்தாபித்தமையால் மக்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றக் கூடிய வசதியிருக்கிறது. சமீபத்தில் மேற்கு இராஜகோபுரத்தை வாயிலாகக் கொண்ட தண்டாயுதபாணி சுவாமி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. இன்று மாவிட்டபுரம் தெய்வீக ஒளி வீசி எங்குந் திருவருள் நிரம்பப் பெற்ற மகிமையைக் கொண்டுள்ளது.

ஊரின் பல இடங்களிலிருந்தும் அடியார்கள் மாவிட்டபுர முருகனைத் தரிசிக்கக் கூட்டங் கூட்ட மாக வருகிறார்கள். ஆலயத்தில் பூசைகள் யாவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தீராத வியாதி களை மாற்றியும் அடியார்களுக்கு இஷ்ட சித்திகளைக் கொடுத்தும் முருகன் அருள்கின்றான். தெய்வீகக் கலைகளான முத்தமிழ்க் கலைகளையும் **முத்தமிழ்க் கலைமன்றம்** என்ற ஸ்தாபனம் முறையாக நடாத்தி வருகிறது. இதில் சமயம், பண், இசை, நடனம் என்பன பயிலும் வகுப்புக்களும், ஓவிய, சம்ஸ் கிருத வகுப்புக்களும், வசந்தன், காவடி போன்ற கிராமிய நடன வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வரு கின்றன.

பிரதமர்கள், அமைச்சர்கள், அரசாங்க அதி காரிகள் மாவிட்டபுரத்தின் வளர்ச்சியை நேரில் வந்து பார்வையிட்டும், பெருமானைத் தரிசித்தும், கோவில் வளர்ந்துவரும் அழகினைப் பார்த்தும் எல்லையற்ற மகிழ்ச்சியோடு செல்கின்றனர்.


## இன்றைய மாவிட்டபுரம்

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணக் குடாநாட் டில் யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து பத்து மைல் வடக்கே அமைந்த ஊர்தான் '**மாவிட்டபுரம்**'. இத் தெய்வீக ஸ்தலத்திற்குக் கிழக்கே பனை, வீமன் காமம், மயிலிட்டியும், தெற்கே தெல்லிப்பழையும், மேற்கே கொல்லங்கலட்டி, பன்றாலை, கீரிமலையும், வடக்கே போயிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி ஆதியாம் ஊர்களும் எல்லைகளாக அமைந்திருக்


கின்றன. பல வருணத்தவர்களும், பல தொழில் கலைச் செய்பவர்களும் இங்கு வாழ்கிறார்கள். வெற்றிலை, கமுகு, தானியவகைகள், கிழங்கு வகைகள் ஆதியனவே முக்கிய பொருள் வருவாய்ப் பயிர்களாக இங்கு பயிரிடப்படுகின்றன. இங்கு காணப்படும் தென்னைகள் பல, கோவிலிற்கென விடப்பட்டுள்ளன. உரிய காலங்களில் அதன் வருவாயைக் கோவிலிற் சேர்ப்பது வழக்கம். விரத காலங்களிலும் மற்றும் விசேஷ காலங்களிலும் மக்கள் கடும் விரதம் பூண்டு மிகுந்த பயபக்தியுடன் ஆலயதரிசனஞ் செய்துவருகிறார்கள். மாவிட்டபுரத்திற்குப் புகைவண்டி மூலமாகவும், தெருக்கள் மூலமாகவும் மிகவுஞ் சுலபமாக வந்தடையலாம். பலாலி விமான நிலையம் இங்கிருந்து கிழக்கே இரண்டு மைல்களுக்கப்பால் இருக்கின்றது. காங்கேசன்துறைத் துறைமுகம் வடக்கே ஒரு மைலுக்கப்பாலும், கீரிமலை நன்னீரூற்றுக்கள் மேற்கே ஒன்றரைமைலுக்கப்பாலும் இருக்கின்றன. மாவிட்டபுர எல்லையை யடைந்ததும், பச்சிளம் பயிர்கள் வரிசை வரிசையாகத் திகழும் காட்சியும், மஞ்சினை மிஞ்சும் கொண்டல்சேர் கோபுரத்தின் கவினுறு காட்சியும் பார்ப்பதற்கு மிகவும இரம்யமாயிருக்கும். இதேபோல, கோவிலின் உட்புற அமைப்பு வேலைகளும் விதம் விதமான அழகைத் தந்து மனதைத் தம்பால் ஈர்த்துவிடுகின்றன. இங்குள்ள வாகனங்களும், சிற்பத்தேர்களும் எல்லையற்ற அழகைக் கொண்டுள்ளதால் அவற்றைத் திரும்பத் திரும்பப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் ஏற்படும்.




வெள்ளிக் கொடித்தம்பம்



கீரிமலை நகுலேஸ்வர ஆலய – சிற்ப விமானம்



இடும்பன் வாகனத் திருவிழா



தேரோடும் வீதியில் அடியார்கள்
அங்கப் பிரதிட்டை செய்கின்றனர்

**கோவிலின் அமைப்பு**

இக் கோவிலில், விக்கினேஸ்வரர், சந்தான கோபாலர், மகாலட்சுமி, சிதம்பரேஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரர், வைரவர், நவக்கிரகங்கள், சண்முகர், முத்துக்குமாரசுவாமி, சுப்பிரமணியர், சந்திரசேகரர், மயூரம், பலிபீடம் ஆதிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. கர்ப்பக்கிருஹத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் வள்ளி தெய்வானை சமேத கந்தசுவாமி பிம்பங்கள் சோழர்காலச் சிற்பவடிவினைக் கொண்டு மிகவும் அழகாகக் காட்சியளிக்கின்றன. மயிலின்மீது இரு சக்திகளோடும் வீரவேல், வெற்றிவேலோடும் அருள் சுரந்துகொண்டு நிற்கும் திருவருட்காட்சி வார்த்தைகளாற் கூறமுடியாதது. அங்கு ஆதிகால விக்கினேஸ்வரரும், கதிரைவேலும், சிவலிங்கமும் இருக்கின்றன. கர்ப்பக்கிருஹம், அர்த்தமண்டபம் ஆதியன கருங்கற்களாற் சிற்பவடிவோடு கட்டப்பட்டு 1927ஆம் ஆண்டிற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மகாமண்டபம், நிர்த்தமண்டபங்களின் கருங்கற்றிருப்பணி வேலைகள் நடைபெற்றுவருகின்றன. விரைவில் பூர்த்தியாகும் நிலையில் காட்சியளிக்கின்றன. ஸ்தம்ப மண்டபம், வஸந்தமண்டபம், தட்டிமண்டபம், வேட்டைமண்டபம் ஆதியனவும் முறையாகக் கட்டப்பட்டிருக்கின்றன. யாகசாலை, பாகசாலை, களஞ்சியம், இன்னும் வேறும் பல மண்டபங்களும் இங்குள்ளன. இக் கோவிலில் அசையா மணிக் கோபுரம் ஒன்றுதான் இப்போது உண்டு.

மூன்று சுற்றுப்புறவீதிகள் இங்குள்ளன. வாரந்தோறும் சுக்கிரவாரத்திலும், மாதந்தோறும் வரும்

கார்த்திகையிலும், சித்திரை, தை மாதச் சங்கிராந்தி புண்ணியகாலத்திலும், உள்வீதியில் முத்துக்குமார சுவாமி உற்சவமூர்த்தியாக வலம் வருவார். ஏனைய உற்சவாதி தினங்களில் மூன்றும் வீதியிலும் சுவாமி பவனி வருவார். இரண்டாம் வீதியின் வடபால் சிறந்த நந்தவனம் இருக்கின்றது. அந்த நந்தவன வாசலில் ஒரு பிரமாண்டமான 'காஞ்சிமா' நிற்கின்றது. இதுதான் இத் தலவிருக்ஷமாகும். வீதிகளோரமாகப் பல கூபங்கள் இருக்கின்றன. பல தர்ம மடங்களும் கட்டப்பட்டுள்ளன. உற்சவாதி காலங்களிலும் மற்றும் ஏனைய விசேஷ காலங்களிலுஞ் சில மடங்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. கோவிலின் தென்பால் நுண்கலைகளான, இயல் இசை நாடகம், நடனம், ஓவியம், சிற்பம் ஆதியனவற்றைப் பயிற்றுவிப்பதற்குப் பிரமாண்டமான ஒரு கலாச்சார மண்டபத்தை நிறுவ இங்குள்ள 'முத்தமிழ்க் கலைமன்றம்' என்ற கலாச்சார ஸ்தாபனம் முயன்றுவருகிறது. இந்த ஸ்தாபனத்தார் பல கலைகளையும் பயிலக்கூடிய ஒரு பல்கலைக் கழகத்தையும் நிறுவ உத்தேசித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**பூசை, கிரியை முறைகள்**

இக்கோவிலில் நடைபெற்றுவரும் பூசைகள் கிரியைகள் யாவும் ஆதிகாலத்திருந்து வேத சிவாகம முறைப்படி இன்றும் நடைபெற்று வருகின்றன. உஷக்காலம் அதிகாலையிலும், காலசந்தி காலையிலும், உச்சிக்காலப் பூஜை நண்பகலிலும், சாயரட்சை சாயங்காலத்திலும், இரண்டாம் காலப்

பூஜை இரவிலும், பின்னர் அர்த்தஜாமப் பூஜை மூன்றும் நாலாஞ் சாமங்களிலும் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்பூஜைகள் சில சமயங்களிலே தாமதித்தும் நடைபெறுகின்றன. இக் கோவிற் பூஜைகளின்போது ஆதிகாலத்துக் கலைஞர்களின் சந்ததியினரே இன்றும் பணிபுரிகிறார்கள். இங்கு இசையாளர்களில் நாதஸ்வரக் கலைஞர்களுக்கே முதன்மையான ஸ்தானம வழங்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இவ் ஆதீனத்தின் சார்பில் தேர்த் திருவிழாவன்று கோவிலின் உட்துவார கோபுர வாசலில் வைத்து ஷண்முகப் பெருமான் முன் னிலையிற் பக்தர்கள் புடைசூழ ஆதீனகர்த்தாவால் கௌரவிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இங்கு நாதஸ்வரம் வாசிப்பவர்களுக்கு நிபந்தனைகள் பல உண்டு.

இவர்களின் அனுமதியின்றி எப்படிப்பட்ட வித்துவானாயிருந்தாலும்சரி இக் கோவிலில் நாதஸ் வரம் வாசிக்க முடியாது. காலஞ்சென்ற இராஜரத் னம்பிள்ளை, காருக்குறிச்சி அருணாசலம்பிள்ளை ஆகியோர் ஈழநாட்டிற்கு வந்திருக்கையில் இவர் கள் இங்கு நாதஸ்வரம் வாசிப்பதற்கு எவ் வளவோ முயன்றும் முடியவில்லை. முக்கிய கார ணம் அவர்கள் இவ்வாதீனத்தின் இசையாள ருக்குரிய நிபந்தனைகளை ஏற்கவில்லை. இதைப் போலவே, வெள்ளைகட்டும் கலைஞர்களும் தேரி லன்று உள்வீதியிலுள்ள திருமஞ்சனக் கிணற் றடியில் வைத்துக் கௌரவிக்கப்படுகின்றனர். இவர்களும் இங்கு பரம்பரை பரம்பரையாக இக் கலையில் ஈடுபட்டுவருகின்றனர். இக் கலைஞர்கள்

ஆனைக்கோட்டை, மாவிட்டபுரம், வீமன்காமம், தையிட்டி ஆதிய இடங்களிலிருந்து தத்தம் சேவைகளைச் செய்துவருகிறார்கள். சிற்பவேலை, மரவேலை, இரும்புவேலை இன்னும் இக்கோயிலுக்கு வேண்டிய பல தொழில்களைப் புரியும் கலைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அன்றைய தினத்திற் கௌரவமளிக்கப்பட்டுச் சன்மானங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**கோவில் உற்சவங்கள்**

இக்கோவிலில் நடைபெறும் பல்வேறு உற்சவங்களுள் தைப்பூசத் திருநாளும், ஆனி, ஆடி மகோற்சவாதிகளும், ஐப்பசி சுக்கிர வாரம், கந்தசஷ்டிவிழாக்களும், கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகை விழாவும் மிக மிகப் பிரசித்தமானவையாகும்.


தைப்பூசத் திருநாளன்று ஷண்முகப் பெருமான் தேரின்மீதிவர்ந்து அடியார்களுக்கு அருள் தரும் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும். ஆனிமாத பூர்வ பக்ஷ ஷஷ்டியில் துவஜாரோஹணமாகித் தொடர்ந்து இருபத்தைந்து நாட்களுக்கு உற்சவங்கள் நடைபெறும். ஐந்தாம் திருநாளன்று ஷண்முகப் பெருமான் திருநடனமாடும் உற்சவம் நடைபெறுகிறது. இந்நடனம் வாத்திய இசை, பஜனை ஆதியவற்ருேடு நடைபெறுங் காட்சியுங் கோலமும் தன்மையும் வேறெங்குங் காண முடியாதவை. கார்த்திகைத் திருநாளன்று அநேகர் காவடியெடுத்தும் நாள் பூராவும் மாவிளக்கேற்றி சகஸ்ரநாமார்ச்சனைகள் செய்வித்தும் தத்தம் வழிபாடுகளை இயற்றுவர் பிள்ளைவிற்றல், அன்னப்பிராசனம், அள்ளு



திருக்கார்த்திகைத் திருவிழா



திருக்கார்த்திகை விழா — காவடியாட்டம்



வேட்டைத் திருவிழாக் காட்சி



வேட்டைத் திருவிழாக் காட்சி

காசு வழங்கல், மற்றும் தத்தம் நேர்த்திக்கடன் களைப் பூர்த்திசெய்தும், அபிஷேகம் செய்வித்தும் தங்களது வழிபாடுமுறைகளை அடியார்கள் செய்வர். அன்றிரவு மும்மூர்த்திகளும் பூஞ் சப்பரத்தில் வீதிவலம்வருங் காட்சியும், பகலில் மயில் மீதேறிக் கந்தசுவாமியார் வீதிவலம் வருங் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகிவிடும். இருபத்திரண்டாந் திருநாள் 'மிருகயாத்திரை' என்னும் வேட்டைத்திருநாளாகும். அன்றும் இங்கு ஒரு தனிச் சிறப்பை மக்கள் காண்பார்கள். இருபத்து மூன்றாந் திருநாள் பெரிய சப்பரத் திருநாளாகும்.

ஒவ்வொன்றும் நூறுயாரளவிலிருக்கும் நான்கு வடக்கயிறுகள் பூட்டிய இப்பெருஞ் சப்பரத்தை இழுப்பதற்குப் பத்தாயிரத்துக் கதிகமானவர்கள் வேண்டும. இப்பெருஞ் சப்பரம் அசையும்போது 'இது ஒரு அசையுங் கோபுரமோ', எனவும், 'மாமலையொன்று ஊர்கிறதோ' என்றும் மக்கள் வியப்புறுவர். இச் சப்பரத் திருவிழாவைத் தரிசிக்க இலங்கை யெங்கணுமிருந்து பக்தர்கள் பெருந்திரளாகக் கூடிவிடுவார்கள். இவர்கள் அடுத்தநாள் நடைபெறும் பஞ்சரதோற்சவத்தையும் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவத்தையும் தரிசித்துத்தான் தத்தம் இல்லங்களுக்கு ஏகுவார்கள்.

**பஞ்சரதோற்சவம்**

இருபத்திநாலாந் நாள் உற்சவம் பஞ்சரதோற்சவமாகும். விக்னேஸ்வரர், கந்தசுவாமி, சந்திர சேகரர், ஷண்முகர், தண்டேஸ்வரர் ஆதியாம் மூர்த்திகள் வரிசையாகத் தேரின்மீதிவர்ந்துவரும் காட்சி உண்மையிற் பார்ப்பதற்கு இரம்மியமான

தாக இருக்கும். அதிகாலையில் ஷண்முகப் பெருமான் மயிலோடு வள்ளி தெய்வானையம்மன் சமேதராய் முறையாக அலங்கரிக்கப்பட்டுச் சிம்மாசனத்தின் மீது திருநடனத்துடன் ஆடி அசைந்து அசைந்து வந்து நேரிலேறும் காட்சியும், அதேபோல, அன்று மாலை பக்தர்குழாம் புடைசூழ, நாதஸ்வர இசை ஒருபால் முழங்க, சங்கு சேமக்கல வாத்தியங்கள் ஒருபால் முழங்க, முருகநாம கீர்த்தனைகள் ஒருபால் இசைக்க, இன்னிசை ஒருபால் ஒலிக்க, தேவர்களையொத்த அந்தணர்கள் பூமாரி சொரிய, ஷண்முகப் பெருமான் ஆடி ஆடி அசைந்து அசைந்து தமது யதாஸ்தானத்தை அடையுங் காட்சியும் அடியார் உளத்தினைப் பக்திக் கடலிலாழ்த்தும். இக் காட்சியைத் தரிசிக்க அன்று கூடும் மகாஜனங்களின் தொகை கணக்கிலடங்காதது. உண்மையில் இவ் வையகத்தில் நாம் காணும் திருவருட் காட்சியில் இதுவே முக்கியமானதாகும். இவ் வேளையிலே தான் இவ்வாலய ஆதீன நாதஸ்வர மேளவாத்தியக் கலைஞர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

அன்றிரவு ஆடி அமாவாசைத் தீர்த்தத்திற்காக — கீரிமலை நகுலாசல சமுத்திர தீர்த்தமாடுவதற்காகச் சுவாமி எடுத்துச் செல்லப்படுவர்; தீர்த்தமாடி முடிந்ததும் அங்கு பத்தர்களின் வழிபாட்டிற்கு மாலைவரையும் அமர்ந்திருப்பர்; பின்னர் மிகுந்த கோலாகலத்துடன் கலை நிகழ்ச்சிகள் முன்புறம் நடைபெறப் பல்லக்கிற் கோவிலுக்கு எழுந்தருளுவார். இவ்விழாவை 'ஆடி மஞ்சத் திருவிழா' என்றழைக்கக்கூடியதாக அமைக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. அன்றிரவு துவஜ அவ

ரோஹணமாகி மகோற்சவங்கள் தண்டேஸ்வர, ஆசார்ய உற்சவங்களோடு இறுதிக் கட்டத்தை யடையும். இருபத்தாரும் நாள் தண்டாயுதபாணி உற்சவம் எல்லா உற்சவங்களுக்குஞ் சிகரம் வைத்தாற்போல் அமைந்துவிடுகின்றது. இவ்வுற்சவம் 1964ஆம ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. புராண வரலாற்றை முழுமையாக எடுத்துக் காட்டக்கூடியதாக இவ்வுற்சவம் அமைந்திருக்கிறது. மகோற்சவ காலங்களில் மூன்று பிரகார வீதிகளிலுஞ் சனத்திரள் அதிகரித்துக்கொண்டேயிருக்கும். அங்கு பலவேறு தற்காலிக வியாபார நிலையங்கள், பொலீஸ், சுகாதார நிலையங்கள், காரியாதிகாரி கந்தோர், தண்ணீர்ப் பந்தர்கள் இப்படியிப்படியே பல தோற்றுவிக்கப்படும். சங்கீத கதாப்பிரசங்கங்கள், இன்னிசைக் கக்சேரிகள் ஆதியனவும் உற்சவ காலங்களில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட வஸந்த மண்டபததில் நிகழும்.

### விசேஷ விழாக்கள்

நவராத்திரி பூசைகளும் இங்கு நடைபெறுகின்றன. மானம்பூ என்றழைக்கப்படும 'விஜயதசமி'யிலன்று கந்தசுவாமியார் இங்கிருந்து தெற்கே இரு மைல்களுக்கப்பாலுள்ள துர்க்கையம்மன் கோவிலுக்கு எழுந்தருளுவார் அங்குதான் சமீவிருக்ஷ பூசையும் மகிஷாசுர சம்ஹாரமும் நடாத்தப்படுகின்றன. பின்னர் அங்கிருந்து பற்பல கலைநிகழ்ச்சிகளோடு ஆலயத்திற்கு எழுந்தருளுவார். அன்று வீதியோரங்களிலுள்ள வீடுகள், மண்டபங்கள், வியாபார நிலையங்கள் ஆதியன அலங்கரிக்கப்

பட்டிருக்கும் ; வாசல்களில் நிறைகுடம் வைத்துச் சுவாமிக்குப் புஷ்பமாலைகள், பட்டு வஸ்திரங்கள் ஆதியன சாத்தி அடியார்கள் வணங்குவர். ஐப் பசியில் நடைபெறும் ஸ்கந்தசஷ்டி விழா மிகவும் புனிதமாகவும் முறையாகவும் நடைபெற்று வரு கிறது. மக்களனைவருங் கடும் விரத மனுட்டித்து இவ்விழாவினைத் தரிசிப்பார்கள். விரதமனுட்டிப் போர் 'திருச்செந்தூர்ப் புராணம்' படித்தும், கேட்டும் மகிழ்வார்கள். சூரசம்ஹார விழாவும், திருக்கல்யாண விழாவுங் கண்கொள்ளாக் காட்சி யாக விளங்கும். விரத மனுட்டிப்போர் யாவரும் முடிவில் சகஸ்ரநாமார்ச்சனைகள் செய்து நோன்பை முடிப்பர்.

கார்த்திகை மாதத்துத் திருக்கார்த்திகையி ஷன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் மாவிளக் கேற்றியும், நெய்விளக்கேற்றியுந் தத்தமது வழி பாடுகளை இயற்றுவார்கள். இரவு மும்மூர்த்திகளும் எழுந்தருளிச் சொக்கப்பனை கொளுத்தி, வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்தருவர். இங்கு கார்த் திகைச் சோமவாரங்களிற் சந்திரசேகரருக்கு விசேஷ பூஜைகள் செய்து வீதிவலம் எழுந்தருளச் செய்வது வழக்கம். மார்கழியில் திருவெம்பாவைப்பூசைகளின் போது சிதம்பரேஸ்வரீ சமேத சிதம்பரேஸ்வர ருக்குப் பூசைகள் நடைபெறும். சுவாமி வீதிவலம வந்து அடியார்களுக்கு அருள்தருங் காட்சியும் ஆர்த்ரா தரிசனத்திற்கு முந்தியதினத்தில் நடராஜப் பெருமான் தேரின்மீதிவர்ந்து வருங் காட்சியும் பக்தர்களைப் பரவசமடையச் செய்துவிடும். அன் றிரவு விசேஷ அபிஷேகமானதும் அதிகாலையில்

ஆருத்திரா தரிசனம் நடைபெறும். இவ்வாலயத்தில் கந்தபுராணபடனம் வைகாசியில் ஆரம்பமாகி மகோற்சவ இரண்டாந் திருநாளன்று பூர்த்தியடையும். பூர்த்திவிழாவன்று அந்தணர்களுக்கும் மற்றும் ஏனையோருக்குந் தானங்களுந் தெட்சணைகளுங் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல் திருச்செந்தூர்ப் புராணபடன முடிவிலும் பக்தர்கள் தானங்களை வழங்கி ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள்.

**வளர்ச்சியும் ஊரின் செழிப்பும்**

இக்கோவிலின் பூசைகள் மற்றுந் தொழில்கள் யாவுங் கோவில் ஆதீனகர்த்தாவின் கட்டளையின் பிரகாரமே நடைபெற்றுவருகின்றன. இங்கு எதுவும் அவரது அனுமதியின்றி நடைபெறமாட்டாது. தில்லைவாழ் அந்தணர்களின் சந்ததியினரே இன்றும் முப்போதுந் திருமேனி தீண்டும் அந்தணர்களாக மிகுந்த பக்திசிரத்தையோடு பூசனைகள் செய்துவருகின்றனர்.

இப்போது கோவிற் திருப்பணிகள் யாவும் வல்லுநர்களைக்கொண்டு நிறைவேற்றப்படுகின்றன. கருங்கல் வேலைகளைக் காரைக்குடியைச் சேர்ந்த பெரியசாமி ஸ்தபதியின் தலைமையில், தேர்ந்த சிற்பிகள் பலர் இப்போது செய்துவருகிறார்கள்.

மூர்த்திகள் பல அவ்வவ்விடங்களிற் பிரதிஷ்டை செய்யப்பட்டுவருகின்றன. வெகுவிரைவில் ஆரம்ப காலத்திருந்த பொலிவை இக் கோவிலும் சுற்றுடலும் பெற்றுவிடும் என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை.

இக்கோவில் விருத்தியடைந்து வருவதுபோல் ஊரும் அபிவிருத்தியடைந்து வருகிறது. கந்தப்பெருமான் விக்கிரகங்கள் வந்திறங்கிய துறைமுகத்தைக் கொண்ட காங்கேசன் துறையும், மாருதப்பிரவல்லியின் குருவான நகுலமுனிவரது நகுலேஸ்வர ஆலயமும், நகுலாசல தீர்த்தத்தைக் கொண்டுள்ள கீரிமலையும் இன்று பலவிதத்திலும் அபிவிருத்தியடைந்துவருவது கண்கூடு. இங்கு, பல தொழிற்சாலைகள் உருவாக்கப் பெற்றிருக்கின்றன; சங்கங்கள் பல தோன்றியிருக்கின்றன; பாடசாலைகள் பல உள்ளன; நுண்கலை ஸ்தாபனம் ஒன்றுண்டு. இப்படியிப்படியே மக்களுக்குத் தேவையான பற்பல ஸ்தாபனங்கள் தோன்றியும, தோன்றுவதற்கு ஆயத்தமாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

### பேரறிஞர்கள் போற்றும் பதி

பாரதநாடும் ஈழநாடும் போற்றும் பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண பாரதியார், குருகவி பண்டிதர் மகாலிங்கசிவம் போன்ற அறிஞர்கள் வாழ்ந்த மாவிட்டபுரத்திலே இன்றும் அவ் வறிஞர்களது சீடர்கள், புலவர்களாகவும் கவிஞர்களாகவும் வித்துவான்களாகவும் வாழ்ந்துவருகின்றனர். மகாவித்துவான் சி. கணேசையர் அவர்கள் அயற் கிராமமான வருத்தலைவிளானில் வாசஞ் செய்த போதிலும் மாவை முருகனில் எல்லையற்ற பத்தியைக்கொண்டிருந்தார். இம் மகாவித்துவான் பாடிய மாவைச் சுப்பிரமணிய தோத்திர விருத்தம் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

சாலிவாகன சகாப்தம் 1764ஆம் ஞூ —சுப கிருதுஞூ (1842ஆம் ஆண்டு) ஆடிமாதம் முருகப் பெருமான் பேரிற் பாடியரங்கேற்றப்பட்ட ஊஞ்சற் பாக்களை இயற்றியவர் திருநல்லூர் ம. சரவண முத்துப் புலவராகும். இவர் இக் கோவிலில் நெடுங்காலமாக விரதங்கள் பல அனுட்டித்து வழிபாடு செய்து திருவருள் பெற்றார் எனப் பலர் கூறுகிறார்கள். மாவை முருகன் பேரில் ஈழத்துப் புலவர்கள் பாடிய பாமாலைகள் அதிகமுண்டு. என்கையிற் கிடைக்கப்பெற்றவையும் அவ்வவற்றின் ஆசிரியர்களது பெயர்களும் பின்வருமாறு:

1. சில தனிப்பாடல்கள் — முத்துக்குமார கவிராயர்.
2. மாவைப்பதிகம், மாவை இரட்டைமணிமாலை, மாவைக் கலிவெண்பா — சுன்னாகம், அ. குமார சுவாமிப்புலவர்.
3. மாவைக்கந்தர் அகவல், மாவைப்பதிகம், மாவைக்கந்தர் சிங்காரம் — க. மயில்வாகனம் பிள்ளை.
4. மாவைத்திருவிரட்டைமணிமாலை, ஆறெழுத்துப் பத்து—தெல்லிப்பழை, பூ. பொன்னம்பலபிள்ளை.
5. மாவைச் சுப்பிரமணிய தோத்திர விருத்தம்— வித்துவசிரோமணி சி. கணேசையர்.
6. மாவை மும்மணிமாலை — கரணவாய், செவ்வந்திநாத தேசிகர்.
7. மாவைக்கதிர்காமவடிவேலவர்பதிகம், மாவைப் பதிகம்—வருத்தலைவிளான், க. சரவணமுத்து.

8. மாவைக் கந்தசுவாமிபேரில் பக்திரசக் கீர்த்தனைகள் — மயிலிட்டி, சி. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்.

9. மாவைப் பிள்ளைத்தமிழ்—ஏழாலை, பண்டிதர் மு. கந்தையா, B. A.

10. மாவை முருகன்—மாவை, க. சச்சிதானந்தன்.

இன்னும் எத்தனை எத்தனையோ பாடல்கள் பல இருக்கலாம். அவற்றைக் காணுமிடத்து அறிஞர்கள் என் கைக்கு அனுப்பிவைத்தால், மிகமிக நன்றியறிதலோடு ஏற்று மறுபதிப்புக்களில் அவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.

வளர்ந்துவரும் மாவிட்டபுரக் கந்தசுவாமி ஆலயத்துக்கு நாமனைவரும் ஒன்றுசேர்ந்து எம்மால் முடிந்த தொண்டுகளை யாற்றவேண்டும். வேல் முருகன் புகழ்தரும் மாருதப்பிரவல்லியின் மாவிட்டபுரம் மாண்புடன் விளங்க நாமெல்லோரும் இறைவனைத் துதிப்போமாக.

**மாவிட்டபுர இடப்பெயர் ஆராய்ச்சி**

'மாவிட்டபுரம்' எனும் பெயர் இக்கிராமத்திற்கு எப்படி ஏற்பட்டதென்றும், இதற்கு முந்தி இவ்விடம் என்ன பெயரோடு விளங்கிற்று என்றும் பலர் பலதரப்பட்ட ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சில முடிபுகளை வெளியிட்டுள்ளனர். சிலரது ஆராய்ச்சியின் முடிவுகள் பின்வருவனவாயுள்ளன :

1. சூரசம்ஹாரத்தின் பின்னர் சுப்பிரமணியப் பெருமான் கதிரைமலைக்கெழுந்தருளல் செய்யுங்காலை இங்கு தங்கினரெனக் கூறப்படுகின்றமையால் இவ்விடம் சுப்பிரமணியப்

பெருமானது அருள்பெற்ற இடமெனக் கூறப் படுகின்றது. எப்படியெனில், மாமரவடிவாகி நின்ற சூரனை சம்ஹரித்ததால் மா—மாமர வடிவாகிய சூரன்; விட்ட — அவ்வடிவினைவிட் டேகிய, புரம் — ஸ்தலம்; ஆகவே, மாமர வடிவாய் நின்ற சூரன் அவ்வடிவினைவிட்ட இட மாதலின் 'மாவிட்டபுரம்' என வழங்கப்பட் டது எனச் சிலர் முடிவுசெய்துள்ளனர். இங்கு தலவிருக்ஷமாகப் பிரமாண்டமானதோர் மாமர மும், அண்மையிற் கடலிருப்பதனுற் கடலிலே மாமர வடிவாகிச் சூரன் நின்ருன் என்பதும் பொருத்தமாயிருப்பதைக் கருத்திற் கொள் ளல் வேண்டும் என்பாரு முளர்.

2. மாருதப்பிரவல்லிக்குக் குட்டநோயும் குன்ம வலியும் நீங்கியதால், மா—பெருநோய், விட்ட— நீங்கிய, புரம்—ஸ்தலம். பெரியநோய் நீங்கிய ஸ்தலமானதால் மாவிட்டபுரம் என வழங்க லாயிற்று என்றுங் கூறுவார் உளர்.

3. இங்கு முன்பு ஒரு பிரமாண்டமான ஆலமர மொன்று இருந்ததாம். 'புத்தகசுசு' என்ற புனித இடத்திற்குப் பௌத்தர்கள் யாத்திரை செய்யும்போது இந்த ஆலமரத்தடியிலே தங்கு வது வழக்கமாம். ஆகவே அவர்கள் மகா - பெரிய, யெற்றி — ஆலமரம், புரம் — நிற்கு மிடம். 'மகாயெற்றிபுர' என இவ்விடத்தை அழைத்ததால் அப்பெயர் மாவிட்டபுரமென மாறியது எனவுங் கூறுவார் உளர்.

4. மாருதப்பிரவல்லியோடு 'மகாவிட்டன்' என்ற தளபதி என்பான் இக்கோவிலை நிர் மாணித்து வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்வித்ததனுல் 'மகாவிட்டன்புரம்' என இவ்விடத்திற்கு நாமமிட்டன ரென்றும், காலஞ் செல்லச் செல்ல 'மாவிட்டபுர' மென மாறியது எனவும் கூறுவார் உளர்.

இப்படியாகக் காலத்திற்கேற்றவாறு பல தரப்பட்ட ஆராய்ச்சிகள் புதுப்புதுக் கருத்துக்க ளுடன் தோன்றுவது இயல்பேயாகும். வீண் பிர யத்தனங்களிற் காலத்தைப் போக்காது, 'கோவிற் கடவை' என்ற பெருங்குறிச்சியில் நிகழ்ந்த அற்பு தங்களை முன்னிட்டு இக்குறிச்சியில் நகுலமுனிவ ரின் சாபவிமோசனம் பெற்றபகுதி 'நகுலேஸ்வரம்' என்றும், இளவரசியின் குதிரைமுகம் நீங்கப் பெற்ற பகுதி 'மாவிட்டபுரம்' என்றும், காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய துறைமுகப்பகுதி 'காங் கேசன்துறை' என்றும் மூன்ருகப் பிரிவுபட்ட தெனக் கூறுவதை ஆதார பூர்வமான சான்றுகள் மூலம் நாமனைவரும் ஏற்போமாக.

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மாவைக் கந்தசுவாமிபேரிற் பாடிய

# ஊஞ்சற் பாக்கள்

இஃது சாலிவாகன சகாப்தம் 1764ஆம்ஞூ—சுபகிருதுஞூ (1842ஆம் ஆண்டு) ஆடிமாதம் யாழ்ப்பாணம் நல்லூர், ம. சரவணமுத்துப் புலவனுரவர்களால் இதற்கு முந்திய ஊஞ்சற் பாக்களோடு ஒப்பிட்டுத் திருத்தியுஞ் சேர்த்தும் புதிதாக்கிக் கோவில் வஸந்த மண்டபத்தில் வைத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பெருமக்கள் என்போர் முன்னிலையில் அரங்கேற்றப் பட்டது.

## காப்பு

சீர்பூத்த திருமாது மகிழுஞ் செல்வத்
திறம்பூத்த தென்னிலங்கைத் தேசந் தன்னில்
ஏர்பூத்த நகுலகிரிக் கருகி லென்று
மிசைபூத்த மாவைநகர்க் கந்தர் மீது
பார்பூத்த பனிமலர்கைக் கொண்டு போற்றிப்
பண்பூத்த வூஞ்சலிசை பணிந்து பாட
கார்பூத்த கரடதட விகடம் பூக்குங்
கழிபூத்த கரிமுகன்ருள் காப்ப தாமே.

சுதியோங்கு நாதவிந்து கால்க ளாகச்
சுடரோங்குஞ் சத்திமணி விட்ட மாக
விதியோங்கு மந்திரமெல் லிழைய தாக
வியனோங்கு மறைநான்குங் கயிற தாகப்
பதியோங்கு சதாசிவமெய்ப் பலகை யாக
பரமோங்கு பிரணவமா சனம தாக
மதியோங்கு மவுனமறை முனிவ ரோங்கும்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 1

சொயமேறு தும்புருநா ரதர்பண் பாடச்
சுரமேறுந் தந்திரியாழ் சுருதி கூட
நயமேறு மரம்பையர்கள் நடன மாட
நண்பேறுங் கந்திருவர் நயந்து நாடப்
பயமேறும் பல்லியமெண் டிசையி னீடப்
பண்பேறுங் கொம்பினிசை பரவை மூட
வயமேறும் புகழேற வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 2

விண்பலிக்குந் துந்துமிவீ றெங்கு மேற
விதமபலிக்குந் தவில்பம்பை மீது சேறக்
கண்பலிக்குங் கடிமுரசங் ககனங் கீறக்
கணம்பலிக்குஞ் சங்கோசை கடலை மீறப்
பண்பலிக்குந் தித்திமித் தாளங் கூறப்
பயன்பலிக்குந் தொண்டர்பரி பாகந் தேற
மண்பலிக்கும் வரம்பலிக்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 3

வெயிலிலங்கும் வெண்கவிகை விண்ணின் மேவ
விருதிலங்குங் கொடிகள்வெளி முகடு நீங்க
கயிலிலங்கும் வெண்கவரி மென்கா லேவக்
கதிரிலங்கு மாலவட்டங் ககனந் தாவக்

குயிலிலங்குஞ் சோலைமலர் கொண்டு தூவக்
கொடியிலங்குஞ் சேவல்குதி கொண்டு கூவ
மயிலிலங்கும் வடிவிலங்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 4

சுகந்தேடுஞ் சுத்தர்விழி யருவி சோரச்
சுழிதேடும் பரமுத்தர் தொழுது சேரச்
சகந்தேடுந் தனிவீரர் தயவு கூரச்
சமர்தேடும் பூதகணத் தலைவர் சார
அகந்தேடு மருளறிவா னந்த மார
அடிதேடும் பழவினையே னவலந் தீர
மகந்தேடும் மறைதேட வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 5

சினந்துதிக்குஞ் செந்திருமால் சென்று தாழச்
சீர்துதிக்குந் திசைமுகன்சே வடியில் வீழ
இனந்துதிக்கு மிமையவரெங் கெங்குஞ் சூழ
விசைதுதிக்கு மிந்திரனு யிரங்கண் வாழக்
கனந்துதிக்குங் காளமண்ட கடாகங் கீறக்
கலைதுதிக்கும் முனிகருணைக் கடற்க ணாழ
மனந்துதிக்க வாய்துதிக்க வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 6

திருத்திகழுஞ் செங்கனக முடிக ளாடத்
திசைதிகழுந் திருமுகச்செஞ் சோதி யாடக்
குருத்திகழும் விழிக்கருணை குலவி யாடக்
குலந்திகழுங் கோலமணிக் குழைக ளாடத்
தருத்திகழுந் தண்கடம்ப மாலை யாடச்
சயந்திகழுந் தனிவேலும் மயிலு மாட
மருத்திகழு மார்பாட வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 7

அரம்போற்று மயிற்கணையுஞ் சிலையு மாட
வரிபோற்று மரமகளி ரருகி லாட
உரம்போற்று முபவீத முலவி யாட
ஒளிபோற்றுங் கச்சுமுடை வாளு மாடக்
கரம்போற்றுங் கவினபய வரத மாடக்
கழல்போற்றுந் தண்டைகளின் கலினென்றாடப்
பரம்போற்றும் மறைபோற்ற வாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 8

குலஞ்செயருட் கோலரே யாடீ ரூஞ்சல்
கூர்செய்சமர்க் கோலரே யாடீ ரூஞ்சல்
பலஞ்செய்யுமை பாலரே யாடீ ரூஞ்சல்
பழமறைக்கப் பாலரே யாடீ ரூஞ்சல்
புலஞ்செய்புரி நூலரே யாடீ ரூஞ்சல்
போதகஞ்செய் நூலரே யாடீ ரூஞ்சல்
வலஞ்செய்வடி வேலரே யாடீ ரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடீ ரூஞ்சல். 9

இறைசெழிக்கும் ராசமனு நீதி வாழி
இனஞ்செழிக்கும் வேதமிருக் காதி வாழி
முறைசெழிக்கும் முனிவர்கள்யா கங்கள் வாழி
மும்மாரி பொழிந்துலகத் துயிர்கள் வாழி
நிறைசெழிக்கு மாறெழுத்தும் நீறும் வாழி
நிதஞ்செழிக்கும் சைவம்நீ டூழி வாழி
மறைசெழிக்கும் வள்ளிதெய் வானை வாழி
மாவைநகர்க் கந்தர்தினம் வாழி வாழி. 10

உ

சிவமயம்

# மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்

சுன்னுகம், முத்துக்குமார கவிராசர் இயற்றியது

(1805)

கோவிற் கடவைக் குருபரனு ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறுங்—காவிச்செனும்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனுர்
தாவடியே ழுஞ்சுமையைத் தான்.

திருவிழாத் தரிசனச் சிறப்பு

கருவிழா உலகினிடைப் பிறந்துமெய்ம்மை
மறந்துழலுங் கன்ம சென்ம
உருவிழா முன்னெவரே யாயினுங்கோ
விற்கடவை யுறையுந் தேவைப்
பெருவிளாங் கனிக்கான்கன் றெறிந்தமான்
மருகன்வேற் பெருமா னுக்காந்
திருவிழாத் தரிசிக்கச் செல்லுவார்
யமதண்டம் வெல்லு வாரே.

திருவிழாச் சேவையின் பலன்

கார்படியு நகுலகிரித் திருக்கோவிற்
கடவையினுர் கடவுஞ் செம்பொற்
றேரடியிற் பின்னடியார் திருக்கூட்டத்
துடன்வலமாய்த் தெரிசிப் பார்கள்
ஓரடிக்கோர் பரிமகப்பே றடைவருடம்
பாலுருள்வா ருற்ப வத்தின்
வேரடியுங் கடந்துகந்த வேளடியின்
முத்திசென்று மேவு வாரே.

### சப்பர மஞ்சத் திருவிழா

நாறுநா லாறுதிருக் குடையானுங்
கணங்களும்போய் நுவன்று நாமங்
கூறிநாத் தழும்புறவே தொழும்புறுங்கோ
விற்கடவைக் குகனார் கண்ணி
ராறினார் திருமுகங்க ளாறினார்
படைக்கஞ்சா வயிலார் சங்கத்
தேறினார் சப்ரமஞ்சத் தேறினா
ரடியவரீ டேறி னாரே.

### சுப்பிரமணியக் கடவுள் பவனி வருதல்

மல்லாக மாதகலான் மருகன்சுன்
னாகத்தான் மகன்பா வாணர்
சொல்லாச்சீ ரீவினையான் றுன்னாலை
யானத்தான் சுருமப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா
மத்தானைச் சிகண்டி மாலூர்
வல்லானை மாவிட்ட புரநகரத
திடைப்பவனி வரக்கண் டேனே.

### காதல் மகளிர் செயல்

கரைக்காற் புனல்வயற் றென்மாவைக்
கோவிற் கடவைச்செவ்வேள்
வரைக்கா லிரத மணிக்குர
லார்ப்பு வருமுன்னமே
அரைக்கான் முக்காற் கணக்குக்கு
மென்சந்த மளாவுநறு
விரைக்கா றரக்கடுங் காலாய்
விளைந்தது மெய்யெங்குமே.

உ

சிவமயம்

# மாவைக் கலிவெண்பா

சுன்னாகம்

ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் இயற்றியது

(1895)

## காப்பு

செந்தமிழ்சேர் மாவைத் திருக்கோயில் வாசமுறுங்
கந்தர் கலிவெண்பாக் கட்டுரைக்க—கந்தருக்கு
முன்னவனே யானை முகப்பொருளே பூதகண
மன்னவனே நன்கருள்வாய் மற்று.

## கலிவெண்பா

பொன்மேவு மார்பினனும பூமேவுஞ் சார்பினனும
முன்மேவிக் காணு முழுமுதல்வன்—தன்மேனி

பங்குபெறு மங்கையொடும் பங்கமறப் பூமணம்போ
லெங்கு நிறைந்தே யிருந்தாலு—மிங்குள்ளார்

கண்டு துதித்துக் கரங்குவித்துச் சித்திபெறத்
தண்டயிரினெய்போலத்தானணிமை--கொண்டுறையுங்

கிரிமலைப் பாங்கர்க் கிளருந் திருமாவை
யூரமருங் கோயி லுவந்துறையுங்—காரணனே

வாசவனுந் தேவர்களும் மற்றையரு முற்றதுயர்
மாசறுத்து நல்லின்ப வாழ்வருளப்—பாசமுறும்

மானவர்போல் வானவர்போன் மற்று முயிர்போல
ஈனமுறும் யாக்கைவழி யேகாமன்—ஞானமுதல்

நெற்றித் திருவிழியி னின்மலமாய்ச் சின்மயமாய்
அற்புதமாய்த் தோன்று மருட்சுடரே—நற்பருதி

விண்ணுறமண் ணீர்காலும் வெந்தீயுங் கற்பொழியு
மண்ணலரை விநத மலருமிந்த—வண்ணமென

யாதும் விகாரமின்றி யாவுஞ் செயும்வயிரச்
சோதி மயமான தூமணியே—வாதைபுரிந்

தாருயிரைப் போர்த்தலைக்கு மாணவநோய் தீர்த்தொ
சாரு முடலாதி தக்கமருந்—தாரருளா [ழிக்கச்

லியு நிராமயனே யேக மருத்துவனே
ஆயுமறை யாதிகளா லவ்வுயிர்க்குப்—பாயமுறை

வைத்தவற்றுட் புக்கு மறைந்து நிறைந்துறையும்
வித்தகனேயம்முறைசெய் மேன்மையுள—மெய்த்தவருக்

கிட்டசுக போகங்கள் யாவு மருத்திமுறை [போல
விட்டவர்க்குத் துன்புறுத்தி வெந்தழலி—னிட்டபொன்

ஆக்கு மறக்கருணை யாளா வவர்மீளா
மேக்குயரச் செய்யும் விழுப்பொருளே—போக்கியங்கள்

ஈட்டும வினைக்கேற்ப வெண்ணி முறைநின்று
கூட்டும் பெருநீதிக் குன்றமே—காட்டுவினை

யொத்துப் பரிபாக முற்ற வவதரத்துச்
சத்தி பதிவித்துச் சற்குருவாய்ப்—பெத்தநிலை

போக்கும் பொருட்டுப் புகலு நயனாதி
தீக்கை புரிந்தருளுஞ் செல்வமே—மீக்குலவும்

ஓங்கார மாபீடத் தோடைக் குளத்திருதாட்
பாங்கார் கமழ்நீராம் பன்முகமுந்—தாங்கா

உதித்து மதிப்போ ருளத்துத் தியானங்
கதித்து மதத்துக் களித்து—மதக்கருணை

ஊற்றி னனைத்துநிறைத் துண்மடமுங் கன்மடமும்
பாற்றியொரு மேல்வீட்டின் பாற்குலவ—வீற்றிருத்தி

மன்னியபே ரின்பம் வழங்குங் கடவுளுக்குப்
பின்னிளவ லான பெருமானே—சொன்னநயம்

நந்தாத வாகமத்தி னற்பொருளுஞ் சொற்றமிழும்
மந்தா நிலமலய மாமுனிக்கு—முந்தோதுந்

தேசிக வாதமய ரீர்ந்தசிவ ஞானியருட்
டேசிக வாத திவாகரனே—மாசில்லாக்

கோடி யிருள்வலியுங் கூரு மொளிவலிமை
கோடி யிருளுங் குருமுடியாய்—நீடுலக

முற்று மறுமுகத்து முற்று வறுகுணமாய்
முற்று மறுமுகத்து முன்னவனே—பற்றுபடைப்

பன்னிருகை கோளுற்ற பண்ணவனே யிவ்வுலகிற்
பன்னிருகை கோளாய்ப் பயனுற்று—மன்னுங்

களவினொடு கற்பினைக் காட்டும் பொருட்டாக்
களவினொடு கற்பினைக் காட்டும்—அளகநகைக்

கற்பமர சொர்க்கக் கருங்கட் குறமகளைக்
கற்பமர சொர்க்கக் கரிமகளைப்—பொற்ப

வரைந்த மருங்கணவா வஞ்சகர்தந் நேசம்
வரைந்த மருங்கணவா வள்ளால்—அரந்தைய

சத்திதர வேதந் தகர்க்குந் தனிஞான
சத்திதர வேதத் தனிப்பொருளே—முத்தப்

பழனி மலைக்கினிய பாலா முகிழ்றேய்
பழனி மலைக்கிழவா பானோர்—செழுநிறத்துப்

பாகீ ரதிமதுரப் பாலகா கண்டமுதம்
பாகி ரதிமதுரப் பாடலான்—மாகிரன்

ஏத்த வருள்புரியு மின்னமுதே கிரிமலைத்
தீர்த்த விழவிற் றெரிசித்தங்—கேத்தி

வணங்கு மடியார்க்கு வாய்த்த வரங்கள்
இணங்க வளித்தருளு மெந்தாய்—கணங்கொள்ளுரு

தேவர் குலபதியே செந்தமிழ்சேர் சங்கமுறும்
பாவலனே ஞான பரம்பொருளே—காவலநின்

தந்திரத்தின் வண்ணந் தவறுது பூசைவிழா
முந்து திருப்பணிகள் முற்றுவோர்—சிந்தனையில்

இட்ட மளிப்பதுபோ லெங்கவியு மேற்றருளி
இட்ட மளிப்பா யினிது.

உ
சிவமயம்

# மாவைச் சுப்பிரமணிய
# தோத்திர விருத்தம்

புன்னைநகர், வித்துவசிரோமணி
பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் இயற்றியது.

## திருப்பரங்குன்றம்

அருமறைகண் முதலாய நூலெலா மறுதியிட்
டறைகின்ற பொருளதாகி
அமலதுரி யாதீத முற்றுவெளி யாய்நின்ற
வானந்த மாயமுதலின்
திருநுதலி னுற்றகண் வந்துசர வணவாவி
சேர்ந்துநல் லுருவமைந்து
திகழுமயி லிற்சூர னகலம் பிளந்தமரர்
சிறையதனை நீக்குகுமரா
பெருமையுறு முயர்பரங் குன்றிலமர் முருகனே
பிரணவப் பொருளையறியாப்
பிரமனைச் சிறையினிடை வைத்ததொரு கடவுளே
பிணிமுக முயர்த்தமுதல்வா
வருபவன முறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## திருச்சீரலைவாய்

வேடர்மக டன்னையவர் சிறுகுடிற் புக்குநீ
விழைவுடன் களவெடுத்த
விதமதனை யோர்ந்துளோர் நின்பாத தொண்டன்றி
வேறொன்றை மேவுவாரோ
மூடனே னின்பாத தொண்டுசெயி னல்லவோ
முழுதருள் புரிந்தாளுவாய்
முதிர்கரும் பனையமொழி மங்கையர்கள் சேவைபுகு
முழுமகனு முய்வதுண்டோ
கூடுதிரை விசுமலை வாயெனும் பதிமேவு
குமரனே கங்கைசுதனே
கொக்கினுரு வாய்நின்ற சூர்முத றடிந்ததொரு
கூரிலைய சத்திதரனே
வாடமூச் சுறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## திருவாவினன்குடி

கோடைதனி லுறுவெயிலில் வழிசென்ற மாந்தர்போற்
கொடிதாய பிறவிவழியிற்
குறுகிமெலி வுற்றயா னின்பாத வீழலைக்
கூடுமொரு நாளுமுளதோ
தேடரிய சத்தாகி நின்றதொரு தெய்வமே
திங்களங் கண்ணிவேய்ந்த
சிவனருளு மைந்தனே நின்பாத தொண்டினிற்
சிறிதும்யான் புரிகிலாது

நீடெழில்கொண் மங்கையர்க ளாசையிற் புக்கியா
னேருமறி வற்றயர்ந்தேன்
நேசமுட னமரர்தொழு மாவினன் குடிமருவு
நிருமலம தாயவடிவே
வாடைய தெழுந்தறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## திருவேரகம்

அருவாகி யுருவாகி நின்றிடுந் தன்மைதா
னறியுந் தரத்ததேயோ
ஆதியுறு மகரமுட னுகரமாய் மகரமா
யறைவிந்து நாதமாகி
ஒருவாது நின்றுநீ யுபகரிக் குந்தன்மை
யோர்ந்தவரு னடியையன்றி
யுன்னுவர்க ளோவொன்று நாடுவர்க ளோசொல்
யுள்ளங் கடந்தமுதலே [வை
குருவாகி வந்தென்னை யாளுமொரு காலமுங்
கூடுமோ கூறுநிமலா
கொடிதாய வினையகல வமரரும் வழிபடுஉங்
கோதிலே ரகமமர்ந்தோய்
வருவாத முற்றறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## குன்றுதோருடல்

கருத்தினை யடக்கியொரு கணமேனு நின்னுடைய
கழலடி நினைந்துமில்லேன்
காயத்தி ஞற்செயுந் தொண்டினிற் சிறிதும்யான்
களிப்பினெடு செய்துமில்லேன்
அருத்தியொடு நின்புகழை நாவினுற் சொல்லியு
மறிந்திலேன் பாவியேன்ருன்
அருமாயை யிடைமருவி யகலாத துயரடைந்
தவரம தடைந்தலைந்தேன்
செருத்தணிகை முதலாய மலையெலாஞ் சென்ருடு
சேவகா சிறியேனிடந்
தேடிநீ குருவடிவ மாகிவந் தெனையடிமை
செயினுன தருட்கிழுக்கோ
மருத்துற வெழுந்தறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாலவயம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## பழமுதிர்சோலை

அன்னையொடு தந்தைமனை மக்கள்சுற் றத்தார்க
ளாருமெற் குதவுவாரோ
அந்தகன் விசலுறு பாசத்தை நீயன்றி
யாருந் தடுக்கவலரோ
என்னையே யிவையெலா மறிந்துமெம தறிவுநின்
னிணையடிக டஞ்சமென்று
இம்மியள வாயினும் பற்றுகின் றிலதிந்த
விசைவுநின் புணர்ப்பதன்றோ

உன்னைவிட வெனையாள வல்லதொரு தெய்வமு
முண்டுகொலப் பரமுநீயே
ஓதுபழ முதிர்சோலை மேவியமர் குமரனே
யுன்னடிமை தவிர்கிலேனை
மன்னுயிர்ப் புறவறிவு மூடமுன் வந்துனது
மலரடியென் முடிவைக்குவாய்
மாவையம் பதியிலிரு பக்கமிரு சத்தியர்கண்
மருவமயின் மேவுகுகனே.

## கதிர்காமம்

### வேறு

வெளியிற் செறிந்துபுவி யதனிற் பரந்தனலின்
மீதிற் படர்ந்துகாலின்
மேவிப் புகுந்தலர்கொ ணீரிற் பிறந்தைந்து
விதமாய்ப் பொருந்துபரிசு
எளிதிற் றெரிந்துஞான லருளிற் பொருந்தமிக
வினிதிற் றெரித்தகருணை
யாரும் வரைந்தளவு மொழியத் தகுங்கொலுய
ரிமையம் பிறந்தமுதல்வி
களியிற் பொருந்தியொரு வடிவிற் றுலங்கவிரு
கையிற் றழுஉங்கந்தனே
கருத்திற் கொளுங்கதிரை மலையின் மிசைக்குலவு
காலா யுதத்துவசனே
வளியின் மிகுந்தறிவு மூடிக் கலங்குமுனர்
வந்திங் கெனக்கருள்வைநீ
மாவைப் பதிக்கண்மயின் மீதிற் றுணைச்சத்தி
மருவத் துலங்குகுகனே.

**வெண்பா**

வேத முதல்வா விளங்குசுடர் வேலவனே
நாதங் கடந்துநின்ற நம்பனே — மாதவர்க
ளேத்துகின்ற மாவை யெழினகரில் வீற்றிருக்குங்
கார்த்திகைமைந் தாவென்னைக் கா.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரக் கந்த சுவாமி கோவில் ஆதீனகர்த்தர் பரம்பரையில் 1929ஆம்ஆண்டிற் பிறந்தவர், ப்ரம்மஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்களவர்கள். இப்பொழுது, மாவை ஆதீனத்துப் பிரதமகுருவாக இருக்கின்றார். சைவ நற்பணியிலும், வாழ்விலும் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் இவர். 'உலகியல் விளக்கம்' தந்த சு. நவநீத கிருஷ்ண பாரதியார், வித்துவான் க. வேந்தனார், பண்டிதர் இ. நமசிவாயம் என்போரிடம் தமிழையும், தமது தந்தையாராகிய ப்ரம்மஸ்ரீ சு. துரைசாமிக் குருக்கள் அவர்களிடமும், ப்ரம்மஸ்ரீ ரி. கே. சீதாராம சாஸ்திரிகள், கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா காலஞ்சென்ற ப்ரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் என்போரிடமும் சம்ஸ்கிருதத்தையும் பயின்று புலமை பெற்றவர். பரமேசுவரக் கல்லூரியில் ஆங்கிலம் பயின்று அதன்பின் சில நாள் அரசாங்க ஊழியராக இருந்து பின் பல பெரியார்களின் வற்புறுத்தலின்பேரில் அதை விட்டுவிட்டு மாவைக் கந்தன் பணியே தன் பணியென எண்ணி அதனை முறையாகச் செய்துவருபவர்.



ஆலயங்களை நிலைக்களனாகக் கொண்டு முத்தமிழுஞ் செழித்து வளரல்வேண்டும் என்ற தம் நினைப்பைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதற்காக மாவிட்டபுரம் 'முத்தமிழ்க் கலைமன்றம்' என்ற ஒரு சபையை நிறுவி அதன் தலைவராக இருந்து பல ஆக்கப் பணிகளை ஆற்றியுள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் இம் மன்றம் செய்துவருஞ் சேவைக்கு இவரே காரணராவர்.

சைவப் பெரியார்கள், இசைநாடக வல்லுநர்கள், இலக்கிய கர்த்தாக்கள் என்போரை வரிசை அறிந்து கௌரவித்துள்ளார். இவர் சில கட்டுரைகளைப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்; எனினும் தம்மை ஒரு எழுத்தாளர் என்று எண்ணியதேயில்லை. இவரது கன்னி முயற்சிதான் '**மாவிட்டபுரத் திருத்தல வரலாறு.**'

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்